"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

**தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழ்**

சித்திரை - வைகாசி - ஆனி 1997



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00




ஆசிரியர் : திரு மு. நற்குணதயாளன்

துணைஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்

நிர்வாகப்பொறுப்பு: திரு வ. இ. இராமநாதன்

துணை நிர்வாகம் : திரு சிவ. அசோகன்

நிர்வாகக்குழு:

திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. சி. அற்புதானந்தன், திரு. பொ. சுந்தரலிங்கம்

தொடர்பு முகவரி:

KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford IG5 0JD, England
Tel : 0181 550 4233    Fax : 0181 550 4233

ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்.

சித்திரை - வைகாசி - ஆனி 1997

மணி - 5 ஒலி 18

கலசம்
KALASAM

# சிந்திப்போம் !செயற்படுவோம்!!

வணக்கம்.

பதினெட்டாவது கலசம் அழகான அமைப்பில் உங்கள் கைகளிற் தவழ்ந்து கொண்டிருக்கிறது. ஆழம் நிறைந்த பல ஆக்கங்களை இலகுவான தமிழ் நடையிற் தந்திருக்கின்றோம். சமயத்தை சரியாகப் புரிந்து கொள்ளவேண்டுமென்பது எங்கள் அவா. காலம் மாறிக்கொண்டிருக்கிறது. பழம்பெருமைபாடும் சமயத்தை புதிய தலைமுறை ஏற்றுக் கொள்ளாது. இன்று கணிதம் பாடசாலைகளில் சிந்தனைமயப் படுத்தப்பட்டிருக்கிறது. மரபுவழிக் கணிதக்கல்வி முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது. முன்பு கணிதம் சிந்தனைக்கு வழிகோலியது. அப்போ ஒரு சிலரே சிந்தித்தனர். இன்று சிந்தனையில் ஆரம்பித்து முடிவு கணிதமாகிறது. இதனால் எல்லோரும் சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது . இந்தச் சூழலை மனதில் வைத்துக் கொண்டுதான் நாம் சமயக் கல்வியை வரையறுக்கவேண்டும். சமயத்தைப்பற்றிப் பழம்புகழ் பாடிக் காலங்கடத்தும் கட்டம் இன்று புதிய தலைமுறையினரிடம் எடுபடாமால் போவதை நாம் மிக அவதானமாக அணுகவேண்டும். சமயம் வாழ்க்கையோடு ஒன்றியது. அந்தக் காலத்தில் பாமரமக்கள் கல்வியறிவு பெறமுடியாத நிலையில் சமயக் கதைகள் அன்றைய தேவையைத் திருப்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டன. இன்று அவற்றை நாம் சிந்தனை வயப்படுத்தவேண்டும். சைவ சிந்தாந்தத் தத்துவங்கள் அற்புதமானவை. அவற்றை பிள்ளைகளுக்குக் கொடுக்கும் வழிவகைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த முயற்சிக்கு கலசம் தன்னாலான உதவியைச் செய்யக் காத்திருக்கிறது. தெய்வீகப்பாடல்களைப் பாடித்தான் ஆண்டவனை வழிபடவேண்டும் என்று பிள்ளைகளைப் பயமுறுத்துவதை விடுத்து அப்பாடல்களிற் பொதிந்துள்ள தத்துவங்ளை பிள்ளைகள் விளங்கும் மொழிகளில் வெளிக்கொண்டு வரவேண்டும். எங்களாலேயே பாடம்பண்ணமுடியாத பாடல்களைத் தமிழேதெரியாத சிறுவர்கள் பாடமாக்கவேண்டும் என்று நாங்கள் எப்படி எதிர்பார்க்கமுடியும்?. சமயத்தில் வெறுப்பை உருவாக்கித் தமிழிலும் வெறுப்பை உருவாக்கும் இருட்டிலிருந்து தயவுசெய்து வெளியில் வந்து ஆக்கபூர்வமாக எதையாவது செய்ய வாருங்கள். உங்கள் ஆலோசனைகளை கலசத்துக்கு எழுதுங்கள். நாங்கள் புதிய சிந்தனைகளுக்குக் களம் தரக் காத்திருக்கிறோம்.

சிந்திப்போம்! செயற்படுவோம் !

இறைவன் எங்களுக்குத் தைரியத்தைத் தரட்டும்.

ஓம் நமசிவாய

ஆசிரியர்

# திரு மங்கலமாய் ஈசுர வருடம் மலர வேண்டும்.

மங்கல வாழ்வு எங்குமே மலர
மாட்சியுடன் மக்கள் மனங்கள் மலர
எங்குமே இசிய இன்பம் மலர
ஏற்றமுடன் எல்லோர் வாழ்வும் மலர
இங்கிதமாய் இனிய தமிழ் மொழி மலர
இணையற்ற சித்திரை மாதம் மலர
மங்கள நாமமுடை ஈசுர வருடம் மலர
மாசில்லா உமைஈசன் திருவருள் மலர!


இலண்டன் மாநகரில் இன்பமாய் வாழ் செந்தமிழர்
ஈசுர வருடமதில் இணையற்ற வாழ்வு காண
துலங்கிடு தூயஅருள் விம்பிள்டன் விநாயகனும்
துணையுடனே லூயிஷாம் சிவனும் ஆர்ச்வே அழகனும்
மலர்ந்திடு மங்களஅருள் ஈஸ்ட்ஹாம் முருகனும் மஹாலட்சுமியும்
மாசற்றமாவருள் டூட்டிங் முத்துமாரியும்ஈலிங் கனகதுர்க்கையும்
கலந்தே ஸ்ரோன்லி ராஜேஸ்வரியும் ஸ்ரீசுவாமிநாதரும் சேர்ந்தே
அருள்மழைபொழிய மலரட்டும் மங்கள ஈசுரவருடமிது.

எல்லோரும் இன்பமாய் வாழ வேண்டும்
ஏற்றமுடை மனநிறைவு கொள்ள வேண்டும்
நல்லதொரு இன்ப வாழ்வு நிலைக்க வேண்டும்
நயமுடனே நல்லறிவு கொள்ள வேண்டும்
இல்லம்தோறும் தமிழ் மணம் கமழவேண்டும்
ஈடற்ற ஆன்மீகம் எங்கும் மலரவேண்டும்
தில்லைக் சீத்தன் திருவருள் எங்கும் திகழ வேண்டும்
திரு மங்களமாய் ஈசுரவருடம் மலரவேண்டும்.

**சிவஸ்ரீ தேவலோகேஸ்வரக் குருக்கள்**

# அழகுமிகு ஜேர்மனியில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி

நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் உலகிலே முதன்மை வகிக்கும் நாடுகளில் ஒன்று ஜேர்மனி. இங்கு சுவெற்றா என்ற இடத்தில் சென்ற 1996ஆம் வருடம் நவம்பர் மாதம் முதலாம் நாள் அகிலத்தை ஆளும் அகிலாண்டேஸ்வரி அன்னைக்கு ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகமும் செய்யப் பட்டுள்ளது. தொடர்ந்து நாற்பத்தி யெட்டு நாள்கள் அபிஷேகங்கள், அர்ச்சனைகள், ஆராதனைகள் என்று சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்று டிசம்பர் பதினெட்டாந் திகதி ஆயிரத்தெட்டுச் சங்குகளினால் (அஷ்டோத்ர ஸஹஸ்ரம்) அபிஷேகம் செய்யப்பட்டது. அன்னை அழகோடு எழுந்து அருளுகின்ற இந்த ஆலயத்தில் விநாயகரும் சுப்பிரமணியரும் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்கள். ஈழநாட்டில் ஏற்பட்ட குழப்பங்களாலும் அதனால் விழைந்த இன்னல்களாலும் இடம் பெயர்ந்து வெளிநாடுகளிற் தஞ்சம் புகுந்தவர்கள் பல்லாயிரம். அப்படி வந்து ஜேர்மனியிலும் சிலர் இறங்கினார்கள். ஈழத் தமிழருக்கே உரித்தான பாணியில் இவர்களும் தமது மொழி சமயம் இரண்டையும் பல இன்னல்களுக்கும் இடையில் தமது இரு கண்கள்போலப் பாதுகாத்தார்கள். அந்தப் பண்பு நிலைபெற ஆலயம் அவர்களுக்கு அத்தியாவசியமானதில் வியப்பில்லை.



1985ஆம் ஆண்டு நிலமட்டத்துக்குக் கீழ் உள்ள அறை ஒன்றிலே ஆரம்பித்த வழிபாடு படிப்படியாகப் பரிணாமம் அடைந்தது. மதமாற்ற முயற்சிகளுக்கு நடுவில், இடர்ப்பாடுகளிலிருந்து தனது பிள்ளைகளைக் காக்கும் அன்னைபோல, உலகைக் காக்கும் அன்னைக்கு ஆலயம் அமைக்கச் சுவெற்றா வாழ் தமிழ்மக்கள் விரும்பினர். அந்த முயற்சிதான் இன்று இந்தப் பெருங் கோயிலாகப் பரிமளிக்கிறது. ஆரம்ப காலத்தில் சாவகச் சேரியைச் சேர்ந்த சிவஸ்ரீ மகேஸ்வர சர்மா அவர்கள் பூசை வழிபாடுகளை நடத்தி வந்தார்கள். அவர் வேறு நாட்டுக்குக் குடி பெயர்ந்ததால் தற்போது மட்டுவில் சிவஸ்ரீ ஜெயந்திநாத சர்மா அவர்கள் அந்தத் திருப்பணியைச் செய்யும் கடமையாற்றுகிறார்கள். ஆலயத்தைப் பராமரிப்பதற்காக நிருவாக சபை அமைக்கப் பட்டுள்ளது. வழமையான வழிபாடு, பூசைகளோடு பௌர்ணமி தினத்தில் திருவிளக்குப் பூசையும் ஏனைய விரதகாலங்களில் விசேட பூசைகளும் இங்கு நடைபெறுகின்றன. இது தவிர சமய அறிவுப் போட்டிகளும் ஒழுங்கு செய்யப் படுகின்றன. வேறு பாகங்களிலிருக்கும் மக்களும் இந்த ஆலயத்துக்கு வந்து வழிபட்டு அன்னையின் அருள்பெற்று உய்கின்றனர்.

ஆலயம் மேன்மேலும் வளரவேண்டும், ஜேர்மனியில் வாழும் சைவ மக்களுக்குப் பயன் அளிக்க வேண்டும், சைவசமயம் விருத்தியடைய உதவவேண்டும், அம்பிகை அருளவேண்டும் என்பதே இங்குள்ள மக்களின் ஆசை. உலக அமைதிக்குஅன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

*-திருமதி சிவராஜி மகேந்திரராஜா.-*
(ஜேர்மனி)

# ஒலியும் படைப்பும்

காஞ்சிப் பெரியவர்

*சென்ற இதழ்த் தொடர்ச்சி*

ஜடமான ரேடியோப் பெட்டிக்கு இருக்கிற சக்தியை சைதன்ய முடைய ஜீவர்களும் சம்பாதித்துக் கொள்ள முடியும். அதற்குமேலும் செய்யமுடியும். தபஸ்தான் இந்த சக்தியைத் தருவது. ஒரு சத்தியத்தைத் தெரிந்து கொண்டுதான் ஆவது என்று, அதற்காக அன்ன ஆகார த்தை விட்டு, வீடு வாசலை விட்டு, எப்போது பார்த்தாலும் அதே சிந்தனையாக மனஸை ஒருமுகப் படுத்திவிட்டால் அதுதான் தபஸ். இத்தனையிலும், 'நான் இத்தனை பிரயாசைப்படுகிறேன் அல்லவா! அதனால் எனக்கு ஸத்தியம் தெரிந்தே ஆகவேண்டும்' என்ற அஹம்பாவம் இருக்கக் கூடாது. நாம் எத்தனை பிரயாசைப் பட்டாலும், பகவத் பிரஸாத மாகத்தான் எந்த ஸத்தியமும் பிரகாசிக்கும் என்ற விநயம் எப்போதும் இருக்க வேண்டும். இம் மாதிரி தபஸ் பண்ணி யோக நிலையின் உச்சிக்குப் போனவ ர்கள்தான் ரிஷிகள். ரிஷிகளுக்கு லோக ஸ்ருஷ்டியிலே ஏற்படும் சகல சலனங்களும் - அதாவது பரமாத்மாவின் ச்வாஸ கதிகளும் - தெரிந்தது. தெரிந்தது மட்டுமில்லை, மின்சார அலையைச் சப்த அலையாக convert பண்ணுவது (மாற்றுவது) போல, அந்தச் சலனங்க ளுக்குரிய சப்தங்கள் மநுஷ்யக் காதுக்கு எட்டுகிற சப்தங்களாகவும் அவர்களுக்குத் தெரிந்தன. அப்படிப்பட்ட சப்தங்களையே வேத மந்திரங்கள் என்று தந்திருக்கி றார்கள்.

ஒன்று தோன்றுகிறது. வேதத்துக்கு 'ச்ருதி' என்றொரு பெயர். கேட்கப்படுவது எதுவோ அதுவே ச்ருதி. ச்ரோத்ரம் என்றாற் காது. புஸ்தகத்தில் எழுதிப் படிக்காமல், குரு சிஷ்ய பரம்பரையாக வாயாற் சொல்லிக் காதாற் கேட்ட வேதம் தலைமுறை தலைமுறையாக வந்திருப்ப தால் அதற்கு 'ச்ருதி' என்று பேர் ஏற்பட்டிருப்ப தாகச் சொல்கிறார்கள். எழுதிப் படிக்கக்கூடாது என்ற ஏன் வைத்தார்கள் என்றால் வேத ஸப்தங்க ளை எழுதமுடியாது என்பதால். ழ வுக்கும் ள வு க்கும் நடுவிலுள்ள சப்தம் மாதிரி லிபியிற் கொண்டு வர முடியாத பல சப்தங்கள் வேதத்தில் உண்டு. காதாற் கேட்டுத்தான் இவை வரவேண்டும். அதோடு உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரி தம் என்றெல்லாம் வேத மந்திரங்களுக்கு ஸ்வரமும் உண்டு.அதாவது ஓர் அக்ஷரத்தை உயர்த்தவேண்டும், இன்னொன் றைத் தாழ்த்திச் சொல்ல வேண்டும், சிலதைச் சமமாகச் சொல்ல வேண்டும். புஸ்தக த்தில் எத்தனைதான் critical mark போட்டுக் காட்டினாலும் அச்சுப்பிழை வந்துவிட்டால் உச்சாரணக் கோளாறாகும். உச்சரிப்புத் தப்பி



னாற் பலனே போய்விடும். ஓர் அஷ்ரத்தை அழுத்தி அல்லது மெல்லிசாகச் சொல்லுகிறதால் ஏற்படுகிற சல னத்துக்கும் இன்னோர் அஷ்ரத்தை அப்படிச் சொல்வதால் உண்டா வதற்கும் நிறைய வித் தியாசம் இருக்கும். நம்முடைய உணர்ச் சிகள், இயற்கையை நடத்திவைக்கும் தேவ சக்திகள் இவையும் இந்த வித்தியாசத்துக்கு ஏற்ப மாறிப்போகும்.

ஒன்றுக்கொன்று உச்சாரணம் மாறுபட்டால் எத்தனை விபரீதம் உண்டாகிவிடும் என்பதற்கு, வேதத்திலேயே தைத்திரீய ஸம்கிதையில் ஒரு கதை இருக்கிறது. இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை தனக்குப் பிறக்கவேண்டும் என்பதற்காக த்வஷ்டா என்ற தேவதச்சன் ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினான். அப்போது அஹரங்களின் உச்சரிப்பில் உதாத்தம். அநுதாத்தம் என்று சொன்னேனே, இந்த உயர்த்தல் தாழ்த்தலில் அவன் தப்புப் பண்ணியதாலேயே, அவன் விரு ம்பின பலனுக்கு நேர்மாறாக இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளைக்கு நேர்மாறாக இந்திரன் வதைக்கக்கூடிய பிள்ளை, அதாவது இந்திரனால் வதைக்கப்படக்கூடிய பிள்ளை தனக்க வேண்டும் என்று அவன் பிரார்தித்ததாக ஆகிவிட்டது. கதையும் அப்படியே பிற்பாடு

நடந்தது. இதனால் எல்லாந்தான் வேதத்தைக் காதாற் கேட்டுப் பாடம் பண்ணவேண்டும் என்று வைத் தார்கள். ச்ருதி என்று ஸம்ஸ்கிருதத்திலும் எழுதாக்கிளவி என்று தமிழிலும் வேதத்துக்குப் பேர் ஏற்பட்டது.

ரிஷிகளுக்கு மந்த்ரத்ரஷ்டாக்கள் என்று பெயர். த்ரஷ்டா என்றாற் பார்ப்பவன். 'பார்ப்பான்' என்பதற்குக்கூட அதுதான் அர்த்தம். மந்திரங்க ளைப் 'பார்த்தவர்கள்' என்றால் அவர்கள் மந்திரங்களைக் 'கேட்கவில்லை' என்று ஆகும். மந்திரங்கள் அவர்களுடைய கண்ணுக்கு அகண்ட ஆகாசத்திற் கூட்டங் கூட்டமாகத் தெரிந்தன என்று மந்த்ர த்ராஷ்டா என்பதற்கு அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

இதில் எது சரி? பார்த்தார்களா? கேட்டார்களா? பார்த்தார்கள் என்றால் வேத மந்திரங்கள் எந்த லிபியில் எழுதியிருந்தன? தேவநாகரி, கிரந்தம் எல்லாவற்றுக்கும் மூலமான ப்ராம்மி முதலான எந்த லிபியும் இல்லாத காலத்தில் எந்த எழுத்தில் மந்திரங்கள் தெரிந்தன? வேத ஸப்த ங்களையும் ஸ்வரங்களையும் உள்ளது உள்ளபடி எந்த லிபியிலும் எழுத முடியாதே!

பார்த்தார்கள். கேட்டார்கள் என்றெல்லாம் சொன்னாலும், வாஸ்தவத்தில் வேத மந்திரங்கள் ரிஷிகளுடைய உயர்ந்த தியான நிலையில் அவர்களுடைய ஹ்ருதயத்திலே ஸ்புரித்தன. அதாவது flash ஆயின என்பதுதான். காண்பது, பார்ப்பது என்பது கண்ணால் மட்டும் செய்கிற காரியத்தைக் குறிப்பதல்ல. எல்லா உணர்ச்சி யையும் அது குறிக்கும். 'ஒருத்தன் வாழ்க்கை யிற் பல இன்ப துன்பங்களைக் கண்டான்' என்று சொல்கிற இடத்தில். கண்டான் என்றாற் பார்த்தான் என்ற மட்டுமா அர்த்தம்? 'அநுபவித்தான்' என்றுதானே அதன் பொருள். மந்த்ர த்ராஷ்டா என்றாலும். இப்படியே அநுபவத்திற் தெரிந்து கொண்ட தாகப் பொருள் வைத்துக்கொள்ளலாம். வேதம் சப்த ரூபத்தில் இருப்பதால் அதை நம்முடைய காதுகளுக்கு மேற்பட்ட திவ்ய சக்திபெற்ற காதுகளால் ரிஷிகள் கேட்டுக் கொண்டார்கள் என்று சொல்வதும் உண்டு.

அர்ஜுனன் பகவானின் விச்வரூபத்தைப் பார்க்க ஆசைப்பட்டான். அப்போது கிருஷ்ண பரமாத்மா இந்த உன் கண்ணால் என் விச்வரூபத்தைப் பார்க்க முடியாது, உனக்கு அதற்கான வேறு திருஷ்டியை, தெய்விகமான பார்வையைத் தருகிறேன் என்று சொன்னதாகக் கீதையில் இருக்கிறது.


'திவ்யம் ததாமி தேச'

அர்ஜுனனுக்குத் திவ்ய சஹஸ் (தெய்விக ஆற்றல் வாய்ந்த கண்) உண்டானதுபோல் ரிஷிகளுக்கு பரமாத்மாவிடமிருந்து தோன்றி அகண்ட ஆகாசத்தில் வியாபித்திருந்த மந்திர சப்தங்க ளைக் கிரஹிக்கக்கூடிய திவ்ய ச்ரோத்ரம் (தெய்விக சக்தி வாய்ந்த காது) உண்டாகி யிருக்கிறது.

லோக ஸ்ருஷ்டிக்கும் லோக வாழ்க்கைக்கும் வேண்டிய சப்த சலனங்களை மட்டுந்தான் வேதம் கொடுக்கிறது என்றில்லை. இதைத் தாண்டி பர மாத்மா ஸத்யத்தோடு ஒன்றாகப் போய்விடவும் அதில் மந்திரங்கள் இருக்கின்றன. ஒருத்தன் வந்த வழியாகவே திரும்பிப் போனால் புறப்பட்ட இடத்துக்கே போய்ச் சேர்ந்துவிடுவான் அல்லவா? அந்த மாதிரி ஸ்ருஷ்டி எப்படி வந்தது என்று பார்த்துக்கொண்டே போகிறபோது கடைசியில் சலனமே எழும்பாத ஸ்தானத்துக்கு அது கொண்டு விட்டுவிடுகிறது. சில மந்திரங்களினால் ஏற்படும் நாடி சலனமே அங்கே அழைத்துப் போகிறது. உபநிஷத் மஹா வாக்யங்கள் பிரணவம் எல்லாம் இப்படிப்பட்டவைதான்.

இவ்வளவும் எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் வேதத்தை யாரும் இயற்றவில்லை. ரிஷிகளும் இயற்றவில்லை, பரமாத்மாவுமே கூட யோசித்து யோசித்து ஓலைச்சுவடியும் எழுத்தாணியும் வைத்துக்கொண்டு வேதத்தை எழுதவில்லை என்று விளக்குவதற்குத்தான்.

**நன்றி: தெய்வத்தின் குரல்**



# MARKANDAN & CO

**SOLICITORS**

*Empowered to Administer Oaths*

Legal Aid

**TAMIL HOUSE**
**720, ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters to appeals to European court of human rights.* All types of conveyancing * Litigation * All courts civil/ criminal * Landlords/ Tenant matters* Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters * Free advice for 15 minutes on the first attendance.

**LEGAL AID**

We are always friendly, Easy to talk and keen to help

**Tel : 0181 514 8188**
**Fax : 0181 514 8303**

# AYNGARAN ENTERPRISE



(Wholesale and Retail)
80 Burlington Road(Opp DSS Office)
New Malden, Surrey KT3 4NY

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள்.நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் இவை எமது தாரக மந்திரம். எம்மிடம் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஒடியோ வீடியோ சீடீக்கள் யாவும் கிடைக்கும்.

**☎ :0181 942 1561, 0831 823087**

**FAX : 0181 296 8778**

# ஸ்ரீ கிருஷ்ணனும் யேசுவும்

**சுவாமி விவேகானந்தா**

ஸ்ரீகிருஷ்ணனது வாழ்க்கைக்கும் யேசுவின் வாழ்க்கைக்கும் இடையிற் பல ஒற்றுமைகள் உள்ளன. யாருடைய வாழ்க்கையை யார் பின் தொடர்ந்தார் என்று பல விவாதங்களும் நடப்பதுண்டு. இருவரது நாட்டிலும் கொடுமையான அரசர்கள் ஆட்சியில் இருந்தார்கள். இருவரும் மாட்டுத் தொழுவத்திற் பிறந்தார்கள். இருவரது பெற்றோர்களும் சிறைப்படுத்தப்பட்டார்கள். இருவரும் தேவதைகளாற் காப்பாற்றப்பட்டடார்கள். இருவரும் பிறந்த ஆண்டிற் பிறந்த அனைத்து ஆண் குழந்தைகளும் கொல்லப்பட்டார்கள். இருவரது இளம் பிராயம் ஒரே மாதிரி அமைந்தது போல இருவரும் கொலைசெய்யப்பட்டார்கள். கிருஷ்ணர் தன்னைக் கொன்றவனைத் தன்னோடு மோட்சத்துக்கு அழைத்துச் சென்றார். யேசு நாதரும் திருடனை ஆசீர்வதித்துத் தம்மோடு மோட்சத்துக்கு அழைத்துச் சென்றார்.

பகவத்கீதையிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள தத்துவங்களும் ஒரே மாதிரியானவை. இருவரது சிந்தனைகளும் ஒரே பாதையிற் போகின்றன. உதாரணமாகக் கிருஷ்ணனின் வார்த்தை யிலிருந்தே எடுத்துக் காட்டலாம். 'எப்போ தெல்லாம் நல்லவை அழிந்து தீமைகள் மலிகின்றனவோ, நான் மீண்டும் மீண்டும் இவ்வுலகுக்கு வந்துகொண்டே இருப்பேன். எப்போது ஒரு புனித ஆன்மா மனிதகுலத்தை அழிவிலிருந்து காப்பாற்றக் கஷ்டப்படுவதைப் பார்க்கிறாயோ அப்போது நான் வந்துவிட்டதாக அறிந்து என்னை வழிபடுவாயாக' இதே வேளை யேசுவாகவோ புத்தனாகவோ கிருஷ்ணனாகவோ வரும்போது நமக்குள் ஏன் இத்தனை பிரிவினைகள்? அவர்களுடைய கருத்துக்கள் ஏற்கப்படவேண்டியவை.

ஓர் இந்து பக்தன் கடவுள் தான் யேசுவாகவும் புத்தனாகவும் கிருஷ்ணனாகவும் வேறு ஆசாரியராகவும் வருகிறார் என்பான். ஒரு இந்து தத்துவமேதை இவர்கள் எல்லாம் ஏற்கெனவே பாசப் பிணைப்புகளை அறுத்த ஆன்மாக்கள் என்பான். ஆனால் அவர்கள் மற்றைய ஆன்மாக்களைப் பாசமலங்களிலிருந்து மீட்பதற்காகப் பிறக்கிறார்கள், உலகத்தில் அல்லல் உறும் மனித இனத்தை வழிகாட்ட வருகிறார்கள் என்பான். அவர்களது சிறுபிராயத்திலிருந்தே அவர்கள் தமது பிறவியின் நோக்கத்தை அறிந்திருப்பார்கள். அவர்களின் பிறப்பு எமது பிறப்பைப்போல பாச பந்தங்களால் நிகழ்வதல்ல. அவர்கள் தாமாகவே பிறக்கிறார்கள். அதீதமான சக்தி அவர்களிடம் இருக்கும். பல மனிதர்கள் இந்த சக்தியைக் கண்டு ஆகர்ஷிக்கப்படுகிறார்கள். இந்தப் பெரியோர்களின் உந்து சக்தியால் தெய்வீகம் பரவிக் கொண்டு இருக்கிறது. எல்லா ஆன்மாக்களும் மலபந்தத்திலிருந்து நீங்கும் வரை இவ் விளையாட்டு நடந்துகொண்டேயிருக்கும். இந்தப் புண்ணிய ஆன்மாக்களுக்குத் தலை வணங்குகிறோம். இவர்கள் உலகில் நடமாடும் தெய்வங்கள். இந்த மனிதர்களைத்தான் நாங்கள் வணங்கவேண்டும். மனித வடிவில் வந்தால் மட்டுமே இவர்களை அடையாளம் காண முடிகிறது. மனிதனுடைய நிலைக்கு இவர்கள் இறங்கி வந்தால் மட்டுமே இவர்களை நமக்குத் தெரிகிறது..

மனிதர்களும் மிருகங்களும் கடவுளின் தோற்றங்கள் என்றால். இந்த உத்தம மனிதர்கள் நமது ஆசிரியர்கள், நமது வழிகாட்டிகள். அவர்களின் பாதாரவிந்தங்களை வணங்குகிறோம். மனித வர்க்கத்தின் முன்னோடிகளுக்கு எமது வணக்கங்கள்.

## யார் கடவுள்?

அன்பு என்பது வெறுப்புக்கு எதிர்ப்பதம். அல்ல. ஒருவன் வெறுக்காமல் இருப்பதால் அன்பு செலுத்துபவன் ஆகிவிடமாட்டான். அன்பை பலவந்தமாகத் திணிக்கமுடியாது. பெறவும் முடியாது. துாய அன்பு என்பது கேளாமலேயே தரப்படுவது. அன்பு தான் கடவுள்.

# இலண்டனில் ஆறுமுகநாவலர் விழா.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு 15 - 12 - 96 ஞாயிற்றுக்கிமையன்று இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய மண்டபத்தில் பதினோராவது முறையாக விழாக் கோலாலகமாகக் கொண்டாடப்பட்டது. ஆண்டு தோறும் இந்த விழாவைத் திருமதி தங்கரெத்தினம் முத்துக்குமாரசுவாமி அவர்கள் நாவலரைப் பாராட்டு முகமாகக் கொண்டாடி வந்திருக்கின்றார். சென்ற ஆண்டு விழாவின் பத்தாவது ஆண்டில் இவரது தொண்டைப் பாராட்டுமுகமாக ஸ்ரீ முருகன் ஆலயத்தாரும் சைவமுன்னேற்றச் சங்கத்தாரும் பொன்னாடை போர்த்து இவரைக் கௌரவித்தார்கள். ஆறுமுகநாவலரை நாம் ஏன் நினைவு கூரவேண்டும் என்பது தமிழராகிய எல்லோருக்கும் தெரிந்ததே. ஈழத்திருநாட்டிலும் இந்தியாவிலும் தமிழுக்கும் சைவத்துக்கும் அவர் அரும்பணியாற்றியவர். யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் சைவப்பிரசாக வித்தியாசாலை நிறுவித் தன்னுடைய மாபெரும் தொண்டை நிலைபெறச் செய்தார். இன்றும் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது சென்னையிலும் சிதம்பரத்திலும் நாவலருக்கு விழா எடுத்து வருகின்றார்கள்.

நாவலரைப் பாராட்டும் இந்த விழாவானது எப்படி இங்கிலாந்தில் ஆரம்பமானது எனில் ஆறுமுகநாவலர் பெருமான் வாழ்ந்து வந்த வீட்டை அபிதான கோசம், ஆங்கில ஆங்கில தமிழ் அகராதி இலகுபோத பாடங்கள் போன்ற பல நூல்களை வெளியிட்ட கல்விமானாகிய யாழ்ப்பாணத்து ஆ. முத்துத் தம்பியவர்கள் வாங்கினார். சென்னையில் ஜுபிலி அச்சகம் நிறுவியிருந்த அவர் தாய் நாடாகிய யாழ்ப்பாணம் திரும்பியதும் நாவலரின் வீட்டை வாங்கி அதனை நாவலர் கோட்டம் எனப் பெயரிட்டு அதற்குஅருகில் நாவலர் அச்சுக்கூட மென்ற அச்சகத்தையும் நிறுவினார். அவருக்குப்பின் அவரைப் பெரிய பாட்டனாராகக் கொண்ட திரு.வை. முத்துக்குமாரசாமி அவர்கள் ஆறுமுக நாவலரின் வாழ்க்கை வரலாற்றை முதன் முறையாக ஆங்கிலத்தில் வெளியிட்டார். இலண்டனில் வாழ்ந்து வந்த இவர் சிவபதம் அடைந்த பின்னர் அவரது பாரியாரான திருமதி தங்கரத்தினம் அவர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஆறுமுகநாவலர் விழாவை ஏற்படுத்தி நடாத்தி வருகிறார்.

இந்த ஆண்டின் விழாவில் நாவலர் பெருமானின் திருவுருவப் படத்துக்குப் பூசை செய்து, பின்னர் திருமுறை ஓதப்பட்டது. சைவமுன்னேற்ற சங்கத்தின் திரு வ. இ இராமநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி விழாவை ஆரம்பித்து வைத்தார். நிகழ்ச்சிகளில் முதலாவதாக நாவலரும் தமிழும் என்ற பொருள் பற்றி சிற்றி பல்கலைக் கழகத்தின் தமிழ் மன்றத்து திரு.மா. புவீந்திரன் அவர்கள் நாவலரின் வாழ்க்கை வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகக் கூறி நாவலர் தமிழுக்குச் செய்த தொண்டுகளை எடுத்து விளக்கினார். அடுத்து நாவலரும் பாரதியாரும் என்ற ஆராய்ச்சியான விடயத்தை நாவலர் மேல் அபிமானம் பூண்ட ஆசிரியை திருமதி வரதா சண்முகநாதன் அவர்கள் சிறப்பாக பேசினார்கள்.விழாவைச் சிறப்பிக்கச் சிறுவர் பேச்சுக்களும் லக்ஷ்மி துதி காவடி கரகம் முதலியனவும் நிகழ்த்தப்பட்டன. நாவலரின் தொண்டுகளை எங்கள் சந்ததியாருக்கு நினைவூட்டி மேலும் மேலும் எங்கள் இனம் சிறந்தோங்க நாம் முயலவேண்டும். இந்தப் பணி நாவலர் விழாவோடு நின்றுவிடாமல் பரவி வேரூன்றும் என்பதில் ஐயமில்லை.



# சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்!

மு. நற்குணதயாளன்

மாணிக்கவாசகர் என்னும் கவியரசருடைய உன்னதமான படைப்பாகிய திருவெம்பாவையின் கருத்துரைப்புக்கு நிறைந்த அபிப்பிராயங்கள் கிடைத்துள்ளன. மிக்க மகிழ்ச்சி. இறைவன் எங்கிருக்கின்றான். என்ற வினாவுக்குப் பல விடைகள் பலரால் பலகோணங்களிலிருந்து கூறப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் இறைவனைக் கண்டார் என்றும் அதன் வெளிப்பாடே அவரது பாடல்கள் என்றும் கூறுவர். மாணிக்கவாசகர் இறைவனைக் கன்டார் என்பதா அல்லது உணர்ந்தார் என்பதா சரி என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். கண்டவர் விண்டிலர் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். மாணிக்கவாசகர் ஒவ்வொரு பாடல் தொகுதியிலும் தன்னையே இறைவனாக உருவகிக்கின்ற தன்மையைக் காணக்கூடிய தாகவுள்ளது. உண்மையில் குதிரை வாங்குவதற்காகச் சென்ற மாணிக்கவாசகர் சூழல் மாற்றத்தினால் தன்னைத்தானே உணர்ந்திருக்கவேண்டும். அதாவது அவரது ஆன்மாவை அவர் புரிந்துகொண்டார். இந்த ஆன்ம விசாரணை அவரது ஆன்மாவையும் அதன் படைப்பு நோக்கத்தையும் புரிய வைத்தது என்பதே சித்தாந்த உண்மையாகும். இந்தச் சித்தாந்த உணர்வு அவருள் எழுந்ததும் அவை ஆன்ம வெளிப்பாட்டுப் பாடல்களாக வெளிவந்தன. சிவபுராணம் ஆகட்டும் திருவெம்பாவை ஆகட்டும் மாணிக்கவாசகர் என்கின்ற மனிதனின் ஆன்மாவைப் பற்றிய பாடல்களே. இவருடைய காலகட்டத்தில் வாழ்ந்த கற்பனைவளம் நிறைந்த எழுத்து வன்மை கொண்டவர்களால் சுற்றி வளைத்து எழுதப்பட்ட கதைகள் எம்மை உண்மையான சிந்தனையிலிருந்து திசை திருப்பி விட்டன. என்பது எனது பணிவான கருத்தாகும்.

ஆகமொத்தத்தில் ஆன்மாவை ஒவ்வொரு பிறவியும் துய்மைப்படுத்த வேண்டும். துய்மையான ஆத்மமே 'இறைவன்' என்கின்ற 'கருத்து' ஆகும். அதாவது இறைவன் என்கின்ற சொல் ஒரு 'கருத்து' ஆகுமேயல்லாமல் பொருள் அல்ல. எங்களுடைய உணர்வைவிட்டு இறைவன் என்கின்ற கருத்தை வெளி எடுத்து உருவகம் கொடுத்த பாவப்பட்ட ஆன்மாக்கள் உண்மையை மறைத்தன. கிறிஸ்தவர்கள் சாத்தான் என்று கூறுவது போல் நாம் பாவப்பட்ட ஆன்மாக்கள் என்று கூறலாம். ஆக மொத்தமாக இறைவன் என்கின்ற கருத்தினை 'ஆன்மா' என்று முடிவு கொள்ளலாம். இத்தகு பகைப் புலத்தை அடிப்படையாகக் கொண்டே உரை எழுதி வருகின்றேன். இவ்வரிசையில் திருவெம்பாவையின் மேலும் இரு பாடல்களைக் கவனிப்போம்.

***பாதாளம் ஏழினும் கீழ் சொற்பொழிவு பாதமலர்***
***போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!***
***பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன்***
***வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்***
***ஓத உலவா ஒரு தோழன்தொண்டர் உளன்***
***கோதில் குலத்தரன் றன்கோயில் பிணாப்பிள்ளைகாள்!***
***ஏதவன்ஊர்!ஏதவன் பேர்! ஆர் உற்றார் ஆர்அயலார்!***
***ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.***

இந்தப்பாடலை கவனிப்போம்.

மாணிக்கவாசகருக்கு அவனைப் புரியவில்லை. அவனுடைய ஊர் எது! அவனுடைய பெயர் எது! அவனுடைய உறவினர் யார்! அயலவர் யார்! அவனைப் எப்படிப் பாடுவது என்றெல்லாம் வினவி தத்தளித்து விடைகாணமுடியாமல் ஈற்றில் ***ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்*** என்கிறார். அதாவது முற்றிலும் விளங்கிக்கொள்ள முடியாத ஒப்புயர்வற்ற தோழன் தொண்டர்கள் உள்ளத்தில் எப்போதும் குடிகொண்டு இருப்பவன் என்கிறார். ஒரு தூய்மையான ஆன்மாவைப் புரிந்துகொள்ளுதல் கடினமாகும். அதனாற்றான் ஆன்மாவை ஒப்புயர்வற்ற தோழன் என்கிறார். இந்தப் புரிந்துகொள்ளாத தன்மையை அப்படியே விட்டுவிட விரும்பாத மாணிக்கவாசகர், தொடர்ந்து ஆன்மாவை



வர்ணிக்க ஆரம்பிக்கிறார். ஆரம்ப மும் முடிவும் இல்லை என்கிறார். பாத மலர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்கிறார். திருமேனி ஒன்று அல்ல என்கிறார். ஆணும் பெண்ணும் கலந்த அர்த்தநாரீசுர வடிவம் என்கிறார். சாதாரண ஆன்மாவை விடத் தன்னால் உணரப்பட்ட ஆன்மா, வித்தியாசமானது என்பதைக் காட்டவே அதற்கு முற்றிலும் வித்தியாசமான உருவ அமைப்பை மாணிக்க வாசகர் கொடுக்க முயன்றுள்ளார் என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். ஆணையும் பெண்ணையும் பாதியாக்கிய உடலை அமைக் கிறார். தலையையும் பாதத்தையும் காணமுடியாதவை ஆக்கிவிடுகிறார். 'வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்' அவனைப் புரிந்துகொள்ள முடியாது என்கிறார். அதாவது ஆன்மா தூய்மை நிலை அடையும் வரைக்கும் விண்ணவர்களாக இருந்தாலும் மண்ணில் உள்ளவர்களாக இருந்தாலும் புரிந்துகொள்ள முடியாது என்கிறார். 'விண்ணவர்' என்பதும் ஒரு 'கருத்தே'. இக்கருத்து ஒரு உண்மையை விளக்கிக் கொள்ள மிகைப்படுத்தப்பட்ட துணைக் கருத்தாகும். விண்ணிலே யாரும் இல்லை. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இம்முறை இத்தோடு நிறுத்திக்கொண்டு அடுத்த கலசம் இதழிற் சந்திப்போம்.

*******


# VARSHI'S SUPER STORE



லண்டனில் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கான ஓடியோ, சீடி, வீடியோக்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். தேசிய லாட்டரிச் சீட்டுகளும் விற்பனையாகின்றன.

**FIRST AND THE BEST TAMIL SHOP IN NEW MALDEN**

**99, BURLINGTON ROAD, NEW MALDEN, SURREY KT3 4LR**
**TEL: 0181 336 0061**

KUMARANS KUMARANS

குமரன்ஸ்
தமிழ்க்கடை
KUMARAN BOOK CENTRE

அரசியல் பொருளாதார புத்தகங்களோடு
பெருமளவிலான ஈழ, தமிழக பிரபல எழுத்தாளர்களின்
நாவல்களும், திருவாசகம், திருப்புகழ், திருமுறைகள்
பண்டைத்தமிழ் இலக்கியங்கள்
ஆகியனவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்தூள்
மற்றும் பல லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

532 - 536 FOREST ROAD
WALTHAMSTOW,
LONDON E 17 4NB

TEL: 0181 925 7720 FAX: 0181 925 7721

# தடைகள் வாராத கொடை

செ. சிறீக்கந்தராசா

கொடைக்குக் கர்ணன் என்று இதிகாசம் பேசும். கடையேழு வள்ளல்கள், முதல் ஏழு வள்ளல்கள், இடையேழு வள்ளல்கள் என்று தமிழ் இலக்கியங்கள் பேசும். தமிழ்க் கொடை வள்ளல்கள் ஏனோ மறக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் வடநாட்டு இலக்கியத்தில் கண்ட கர்ணன் நம் மத்தியில் நீங்காமல் நிறைந்து விட்டான். எண்ணெய் தேய்த்து சனி நீராடும் பழக்கம் பாரத காலத்திலும் இருந்தது.

கர்ணன் ஒருநாள் சனி நீராட்டுக்காக உடலில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தான். பொற்க லம் ஒன்றில் இருந்த எண்ணெயைச்சிறிது சிறிதாக உடலெங்கும் தேயத்துக் கொண்டிருந்தான். வீட்டு வாயிலில் நின்றபடி பொற்கலத்தில் இருந்த எண்ணெய் முழுவதையும் தேய்த்து விட்டு நீராடவென வீட்டின் பிற்பகுதிக்குப் போக ஆயத்த மானான். அப்போது 'அப்பா என்னைப் பார்' என்ற ஒரு குரல் அவனைத் தடுத்தது. திரும்பிப் பார்த்தான். ஒரு கிழவன் வாயிலில் நின்றான். ஒரு கணம் யோசித்தான்.

உடல் எல்லாம் எண்ணெய் உள்ளே போய் உடனடியாக எதையும் தொடமுடியாத நிலை. கையில் என்ன இருக்கின்றது என்று பார்த்தான். எண்ணெய் தீர்ந்துபோன பொற்கிண்ணம். உடனடியாக அந்தக் கிழவனிடம் போய் 'இந்தா! இந்தப் பொற்கிண்ணத்தை எடுத்துச் சென்று பணமாக்கிக்கொள்.' என்று கூறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். 'அப்பா என்னைப் பார்' என்ற குரல் கேட்டு அடுக்களையில் இருந்து வெளியே கதவடிக்கு வந்து நடந்தவற்றை யெல்லாம் கவலனித்துக் கொண்டிருந்த கர்ணன் மனைவி, உள்ளே நுழைந்த கர்ணனைப் பார்த்து அந்தப் பெரியவரை உள்ளே அழைத்திருக்கலாமே வாயிற்படியிலே வைதர்து கையிலே இருந்ததைக் கொடுத்து அனுப்பி விட்டீர்களே' என்று கவலை தோய்ந்த குரலில் கூறினாள். அப்போது கர்ணன் 'அந்தப்பெரி–வனைப் பார்த்த போது அவர் பிச்சைக்குரிய பாத்திரம் தான் என்று தெளிந்தேன் ஏதேனும் கொடுத்தாகவே வேண்டும் என்று நினைந்தேன் என் கையிலும் மெய்யிலும் எண்ணெய் நீயோ அடுக்களையில் கொடுக்கவேண்டும் என்று உள்ளம் நினைத்தவுடன் கொடுத்துவிடுவது எனது தருமம். காலம் தாழ்த்தாமல் கொடுத்துவிட நினைத்தேன், கையிலே இருந்தது பொற்குவளை, ஓடிப்போய்க் கொடுத்துவிட்டேன் என்றான் கர்ணன்.

'பொற்குவளையை மாத்திரம் அல்ல, பொற்கிழியும் கூடக்கொடுத்திருக்கலாம் உள்ளே அழைத்து முறைப்படி அமரவைத்து ஆறுதல் அளித்துக் கொடுத்திருக்கலாம் என்று தான் கேட்டேன் எள்றாள் கர்ணன் மனைவி. கொடைக்கு கர்ணன் என்று என்னை உலகம் புகழ்கிறதாம் ஆனால் நானும் மனிதன் தான் என்பது எனக்குத் தான் தெரியும். சாதாரண மனிதனில் உள்ள சபலமும் சலனமும் என்னிலும் உள்ளன என்பது எனக்குத் தான் தெரியும். ஆரம்பத்தில் நல்லன செய்ய நினைக்கும் மனிதர் போகப்போக அந்த நல்ல நினைப்பை ஒழித்து அல்லன செய்வது மனித இயல்பு. அதனாலே தான் கொடுக்கத் தீர்மானித்தவுடன் கொடுத்து விட்வேண்டும் என்று பெரியவர்கள் செல்லிவைத்தார்கள். காலதாமதம் செய்தால் தடைகள் வந்து விடக்கூடும் தடைகள் வரமுன்னர் கொடுத்து விட வேண்டும் என்று விளக்கம் கூறினான் கர்ணன்.

கர்ணனைப் பற்றிய மேற்படி கதையில் உலக நடப்பு உலக இயல்பு நன்றாகப் புனையப்பட்டிருக்கிறது உறவினர் ஒருவர் நல்லநாள் பெரிய நாள் என்று 'வருடப்பிறப்புத் தினம என் வீட்டிறகு வருகிறார் அவலை வெறுங்கையோடு திருப்பிய னுப்பக்கூடாது என்பதற்காக அவருக்கு கையில் பணம் கொடுத்து அனுப்ப வேண்டும் என்று எழுந்து உள்ளே போகிறேன். எழும்போது ஒரு நூறு ரூபாக் கொடுக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டு எழுகிறேன். அறையைத் திறக்கும்போது வேறொரு எண்ணம் தலைக்குள் நுழைகின்றது. அன்றைக்கு வருடப்பிறப்பு ஆதலால் தம்பியின் பிள்ளைகளும் வரக்கூடும். அவர்களுக்கும் ஏதேனும் கொடுக்க வேண்டும் ஆகவே

இவருக்கு ஐம்பது ரூபாக் கொடுத்தால் போதும் என்று மனம் புத்திமதி சொல்கிறது. பணப்பையைத் திறந்து பணத்தை எண்ணும் போது இருபது ரூபாய்த் தாள்களே இருக்கின்றன. மூன்று இருபது ரூபாய்களை எடுக்கின்றேன் மூன்றும் சேர்ந்து அறுபது ரூபா கொடுக்க நினைந்தது ஐம்பது தானே. பத்து ரூபாய்த் தாள் இல்லையே என்ன செய்வது என்று மனம் ஏங்குகின்றது. இரூடைய பிள்ளைகள் நல்ல தொழிலில் இருக்கிறார்கள் நாற்பது ரூபா போதும் என்று மனம் சொல்கிறது. நாற்பது ரூபாயுடன் அறைக்கதவடிக்கு வருகின்றேன் குரங்கு மனம் பின்னரும் எனது உள்ளத்தைக் கவ்விக் கொள்கின்றது. அடக்கமாகச் செலவழி இருபது ரூபாய் கொடுத்தால் போதும் என்று மனம் ஓதுகிறது. திரும்பிப் போய் ஒரு நோட்டை வைத்துவிட்டு ஒரு இருபது ரூபா நோட்டுடன் போய் அதனை உறவினரிடம் நீட்டி 'சும்மா வைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறுகிறேன். வீட்டுக்கு வீடு வாசற்படி என்றாற்போல இது எல்லா வீடுகளிலும் நடைபெறுவது தான். இந்த உலக நடையை மெய்ப்பிக்கின்ற அபிராமி அம்மைப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

**கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்**
**கபடுவாராத நட்பும்**
**குன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணி இலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாதகோலும்**
**ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்**
**துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**
**அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே**
**ஆதிகடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி**
**அருள்வாமி அபிராமியே!**

அருமையான பாடல் அபிராமியிடம் வாழ் கேட்கின்ற பாடல் கொடுக்கின்ற உள்ளத்தைத் தாவென்று கேட்கின்ற கவிஞர் வெறுமனே கொடையுள்ளத்தை மட்டும் கொடுத்துவிட்டால் போதாதுதேவி! தடைகள் வாராத வண்ணம் கொடுக்கக்கூடிய கொடையுள்ளத்தைத் தந்து தவுவாய் என்று கேட்கின்றார்கள் கவிஞர். அனுபவத்தால் கவிஞர் பேசுவது போலத் தொ-ிகின்றது. கர்ணனின் கதையோடு: இதனை சேர்த்துப 'பார்க்கின்றபோது உலக உண்மை ஒன்றைக் கவிஞர் சொல்லாமற் சொல்வது போலத் தோன்றுகின்றது.

கோலைக்கால் ஆழ்வான் என்பான் மேல் ஔவையார் ஒரு பாடல் பாட நேர்ந்தது பொருள் தருவதாகக் கூறிக்கோலைக்கால் ஆழ்வான் அவ்வையாலைப் பலகால் அலைக்கழித்துவிட்டான் ஆத்திரமடைந்த அவ்வையார் அவனுடைய கொரமத்திறனை நையாண்டி பண்ணி ஒரு வெண்பாப் பாடினார். கொடுக்கக் நினைத்தவடன் கொடுக்கா விட்டால் கொடைக்குத் தடைவந்து விடும் என்பதை இந்தப் பாடல் விளக்குகின்றது.

இதோ அந்தப் பாடல்,

**கரியாய்ப் பாயாகிக் காரெருமை தானாய்**
**எருதாய் முழுப்புடவையாகித் திரிதிரியாய்த**
**தேரைக் கால் பெற்று மிகத் தேய்ந்து**
**கால் ஓய்ந்ததே**
**கோலைக்கால் ஆழ்வான் கொடை.**

யானையைப் பரிசாகத தருவதாகக் கூறினான் முதலில் அதன் பின்னர் யானை தர இயலாது குதிரை தருவேன என்றான். பின்னர் அதுவும் இயலாது கரிய எருமை தருவேன் என்றான் அதன் பிறகு கரிய எருமை தருவதில் கயிட்டம் இருக்கிறது ஒரு நாம்பன் மாடு தருகிறேன் என்றான். சரி அதையாகுதல் கொடு என்றேன் மற்றநாள் வரச்சொன்னான். வயது போன நேரத்தில் மாட்டால் உனக்கென்ன பயன் என்று சொல்லிச் சேயைென்று தருவதாகச் சொன்னான. அதையாகுதல் கொடுத்துத் தொலை என்றேன். இன்று நாளை என்று போக்குக் காட்டி ஏமாற்றினான் நடநட என்று மேலும் கீழும் நடந்து எனது கால்கள் தொய்ந்து சுருங்கித் தேரையின் கால்கள் போல் ஆகி விட்டன. ஆனால் ஆழ்வா ணிடமிருந்து எதுவும் எனக்குக் கிடைக்க வில்லை. அவனது கொடைக்கு எப்படியோ தடை வந்து விட்டது. சொன்ன அன்றே கொடுத்திருந்தால் கொடைா நிறைவேறி இருக்கும். எல்லோர் வாழ்விலும் நிகழும் நிகழ்ச்சி இது. கர்ணன் வழிநடப்போமா?

# குறித்து வைக்க வேண்டிய தினங்கள்

13-04-97 ஈசுர வருடம்
18-04-97 ஏகாதசி விரதம்
19-04-97 சனிப்பிரதோஷ விரதம்
22-04-97 சித்திரா பூரணை விரதம்
26-04-97 சங்கடஹர சதுர்த்தி
29-04-97 நடேசர் அபிஷேகம்
03-05-97 ஏகாதசி விரதம்
04-05-97 பிரதோஷ விரதம்
06-05-97 அமாவாசை விரதம்
07-05-97 கார்த்திகை விரதம்
10-05-97 சதுர்த்தி விரதம்
12-05-97 ஷஷ்டி விரதம்
14-05-97 வைகாசி மாதப் பிறப்பு
18-05-97 ஏகாதசி விரதம்
19-05-97 பிரதோஷவிரதம்
21-05-97 பூரணை விரதம்
25-05-97 சங்கடஹர சதுர்த்தி
01-06-97 ஏகாதசி விரதம்
02-06-97 பிரதோஷவிரதம்
03-06-97 கார்த்திகை விரதம்
04-06-97 அமாவாசை விரதம்
08-06-97 சதுர்த்தி விரதம்
10-06-97 ஷஷ்டி விரதம்
15-06-97 ஆனிமாதப் பிறப்பு
16-06-97 ஏகாதசி விரதம்
18-06-97 பிரதோஷவிரதம்
20-06-97 பூரணை விரதம்
23-06-97 சங்கடஹர சதுர்த்தி
30-06-97 கார்த்திகை விரதம்
01-07-97 பிரதோஷவிரதம்

தொகுப்பு : அமுதா

PRASAD SWEETS

புதிதாகத் தயாரிக்கப்பட்ட
காரமான – இனிப்பான
தின் பண்டங்கள்
99p/lb இலிருந்து கிடைக்கும்

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை
நீங்கள் அணுகலாம்
*£1.60p per plate*

ALWAYS
FRESH & BEST

168 Upper Tooting Road
London SW 17
Telephone
0181 682 3363

222 Ealing Road
Wembly, Middlesex
Telephone
0181 902 1704

param & co
SOLICITORS
for all your legal requirements
* Civil litigation & Civil Libertties
* Conveyancing (Residential & Commercial)
* Immigration and Nationaality Matters
* International Transaction
*Commercial Litigation * Personal Injuries
*Entertainment Law * Crime

LEGAL AID CASES UNDERTAKEN

S. PARAMALINGAM, LLM
Assistant Solicitors:
Miss Hina Rajshakha(LLB Hons)
Mrs Anixa Maru (L.L.B Hons)
Mrs Nithy Sivasanthiran


TEL: 0181 200 300 FAX: 0181 200 1360
"Segaram House", 221 Edgware
Road, Colindale, London NW9 6LP

# இந்து சமயம்

க. குணரத்தினம்

நான் சொல்வதை இன்று நீங்கள் ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் இம்முறையில் 25 அல்லது 30 வருடங்களில் நாம் சுயராச்சியத்தைப் பெறுவோம் என்ற திட நம்பிக்கை எனக்குள்ளது' என்றார். தம் நாட்டு மக்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பவும் ஆளும் வர்க்கத்தாரிடமிருந்து ஆட்சியைப் பறிக்கவும் தேவையான சக்தியை மக்களுக்கு ஊட்டவும் அரும்பாடுபட்டார். ஆசிரமங்கள் ஆரம்பித்தார். பத்திரிகைகள் நடத்தினார். கிராமப்புற மக்கள் போன்று உடை அணிந்து எளிய வாழ்வு வாழ்ந்தார். சத்தியாக்கிரகிகளைத் தயார் செய்தார். அவரது தலைமையின் கீழ் மனுக் கொடுக்கும் அமைப்பு என்ற நிலையி லிருந்து ஒரு புரட்சி இயக்கமாகக் காங்கிரஸ் மாறியது. மக்களின் தேசிய உணர்ச்சிகளைத் தூண்டி விட்டார். படித்தோர், தொழில் பார்த்தோர், மாணவர், ஆண், பெண் என்று பலரும் போராட்டத்தில் குதித்தனர். வன்மையற்ற புரட்சி ஒன்றை நடத்தினார். உலகம் அதுவரை கண்டிராத அளவு மிகுந்த வலிமை பெற்ற பேரரசுக்கெதிராக நிராயுதபாணிகளாக நின்ற மக்களை நடத்திச் சென்ற பெருமை அவருடையதாகும். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இந்தியா விடுதலை பெற்றது. இந்திய மக்கள் சாதி சமய பேதமின்றி ஒரே குடும்பமாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருந்தவர் காந்தியடிகள்.

பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்றதை அவர் விரும்பவில்லை. அதன் விளைவாக ஏற்பட்ட குழப்பத்திற்குப் பலியான மக்களுக்கு உதவுவதற்காக அரும்பாடுபட்டார். உலக மனிதாயத்தை ஆதரித்த காந்தியடிகள் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் பாடுபட்டார். அதைப் புரிந்துகொள்ளாத ஒரு இந்து வெறியன் டெல்லியிற் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு சென்று கொண்டிருந்த காந்தியடிகளை நோக்கிச் சுட்டான். ஹரேராம் கூறியபடி கைகூப்பிய வண்ணம் அவர் ஆவி பிரிந்தது. 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அவர் தியாகியானார். அன்று இந்தியா விடுதலைச் சிற்பியை இழந்தது. உலகம் ஒரு ஞானியை இழந்தது.



காந்தியடிகள் அத்வைத வேதாந்தத்தில் நம்பிக்கை வைத்தவர்.மனிதனிடம் தெய்வீகத்தன்மை உண்டு. மனிதனுடைய இறுதி இலட்சியம் கடவுளை உணர்தலே. அதற்காக மனிதன் பெருமுயற்சியில் ஈடுபடுகிறான். செய்த தவறுகளுக்கு வருந்துவதும் தன்னைத் தூய்மையாக்குவதும் நன்முயற்சிகள். வழிபாட்டின் மூலம் இம்முயற்சிகள் சாத்தியமாகும். அக வழிபாடு கடவுளுடன் உறவை ஏற்படுத்தும். புறவழிபாடு மக்கள் சேவையாகிறது.

மனிதனுடைய சமூகஅரசியல், சமய செயற்பாடுகள் எல்லாம் கடவுளின் காட்சியைப் பெற வழி சமைப்பதாக இருக்க வேண்டும். கடவுளின் சிருஷ்டிகளாகிய மனிதரில் நாம் கடவுளைக் காணலாம். மனித சமுதாயத்திற்குச் சேவை செய்வதன் மூலம் கடவுளைக் காணலாம். இவ்வாறு காந்தியடிகள் கூறியுள்ளார். காந்தி யடிகள் சத்தியமே கடவுள் என்றார். சத்தியம் உயிர் வாழ்வுக்கெல்லாம் ஆதாரம். இந்தப் பிரபஞ்சம் சத்தியத்தின் முழுவடிவம். பொரு ள்கள் யாவும் இதனின்று பிறந்த துண்டங்கள். நமது உடலிற் சிறை வைத்திருக்கப்படும் ஆன் மாவாகிய நாமே அந்தச் சத்தியம். சத்தி யத்தின் ஏற்ற முடிவு வன்மையற்ற தன்மையே. மனிதன் மிருகமாகும்

போது வன்மை தோன்றுகிறது. மனிதனிடத்து ஆன்மீகத் தன்மை ஏற்படும் போது மென்மை தோன்றுகின்றது. அஹிம்சை வழியில் மனிதன் முன்னேற வேண்டும் அல்லது அழிவைச் சந்திப்பான். எனவேதான் ஞானிகளும் அவதார புருஷர்களும் சத்தியம், இணக்கம், சகோதரத்துவம், நீதி என்ற அஹிம்சை யின் இயல்புகளைப் போதித்தனர். எமது இறுதி இலட்சியத்தை, அவதாவது ஆன்மா முழுமை பெறுதலை அஹிம்சை வழியில் அடையலாம் என்றார்.

அஹிம்சை என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் ஹிம்சை. ஹிம்சை என்றால் ஊறு விளைத்தல், தீங்கு செய்தல் என்பதாகும். அஹிம்சை என்றாற் கொல்லாமை அல்லது பிற உயிர்களுக்குத் தீங்கு பயக்காதிருத்தல் என்பது மட்டுமல்ல, அது எண்ணம், சொல், செயல் மூன்றாலும் தீங்கு விளைவிக்காதிருத்தல் உலகில் எல்லையற்ற அன்பைச் செலுத்துதல், எனப் பரந்த பொருளை உள்ளடக்கியது. காந்தியடிகள் அஹிம்சையைப் பற்றி விளக்கும்போது அது பேரன்பு, பெரும் தர்மம் என்கிறார். அஹிம் சையைப் பின் பற்றும்போது தவறு செய்த தந்தை அல்லது மகன் மீது அன்பு செலுத்துவது போன்று பகைவனிடத்தோ அல்லது அந்நியனிடத்தோ அன்பு செலுத்த வேண்டும் என்கிறார். பூரண அஹிம்சைக் கொள்கையானது எல்லோராலும் அடைய முடியாத ஓர் இலட்சியமாகும். எனினும் சத்தியத்தைத் தேடுபவர்களுக்கு ஒரு முடிவான இலட்சியமாகப் பயன்படவேண்டும்.

இந்து சமயத் தத்துவத்துக்கு இலக்கணம் கூறிய காந்தியடிகள் அஹிம்சை வழியில் சத்தியத்தைத் தேடி அடைதல் என்று பொருள் கூறினார். சத்தியமும் அஹிம்சையும் காந்தியடிகளின் தத்துவத்தின் இரட்டைக் கொள்கைகளாக அமைந்தன. சத்தியமும் அஹிம்சையும் அரசியற் துறையிலும் சமுதாயத் துறையிலும் காரியங்களைச் சாதிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய ஆயுதங்களாகும் என்று காந்தியடிகள் நம்பினார்.

தனது போர் முறைத் தந்திரங்களுக்குக் காந்திய டிகளால் வழங்கப்பட்ட பெயர் சத்தியாக்கிரகம். அப்பதத்துக்குச் சத்தியத்தின் ஆற்றல் என்று பொருள். அதன் பின் ஆற்றல் ஆன்மீக ஆற்றல் என்றும் அதனைக் கூறுவார். தென் ஆபிரிக்காவில் ஆரம்பித்த பீனிக்ஸ் குடியேற்றத்திலும் டொக்ஸ்டோய் பண்ணையிலும் சத்தியாக்கிரகிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.
(தொடரும்.......)

## HINDUISM

Hinduism is at once a Philosophy, a Religion, and a Way of life. In one sense, there is no religion called Hindu. The term 'Hindu' is purely one of geographic origin, referring to a river, Sindu, where the particular religion- as also the language, arts , agriculture, and civic systems- synthesised with the ancient Indus Basin civilisation of around five thousand years ago, into its present form.

**EDGWARE PHYSIOTHERAPY CLINIC**

Specialised in Sports Injuries
Run by an experienced Charted Physiotherapist.

Kanesh Nathan
Ph.d, M.C.S.P, S.R.P

10The Drive
Edgware,
Middlesex HA8 8PT

**Tel: 0181 958 9820**
**Fax: 0181 958 1244**



# CHILDREN'S KALASAM

**The following pages contain features and articles for and by children. Hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We wish to know the views of children and parents on this matter.**

**-Editor-**

## PUSALAR NAYANAR

Swami Sivananda

Pusalar was a Brahmin of Tiru Ninravur in Thondai Mandalam. He excelied in the mental worship of the Lord. Mental worship is thousands of times better than external ritualistic worship. Mental worship soon leads to Samathi (superconcious state) and Self-realisation. He strongly desired to build a temple for Lord Shiva, but he did not have the money for it. So, mentally he gathered the necessary materials for the purpose. He laid the foundation stone on an auspicious day. He raised the temple and had even fixed an auspicious day for the installation of the deity in it.

The Kadava king who was also a great devotee of Lord Shiva had built a magnificent temple in Conjeevaram. By chance he has also fixed the date which Pusalar had mentally chosen, for the installation of the Lord in his temple. The Lord wanted to show the king the superiority of Pusalar's great devotion. So, the Lord appeared in the king's dream and asked him to postpone the installation ceremony in his temple, as He would be going to the temple constructed by His devotee at Tiru Ninravur. The king woke up from sleep and was intensely eager to have the Dharshan of the devotee mentioned by the Lord and also to have a look at the great temple he had built which he thought would be far superior to his temple. The king came to Tiru Ninravur and searched all over the place for the temple. He could not find any. Then he enquired about Pusalar. He found out Pusalar's house and approached him. Pusalar was stunned when he heard of the king's dream. Soon he recovered and was filled with joy. He thought, 'How kind and merciful is the Lord. I am only a wretched creature and He has accepted my mental shrine as His Abode. I am really blessed.' He told the king that that temple was only in his mind. The king was very surprised to hear this. Admiring Pusalar's devotion, the king fell at his feet and worshipped him. Pusalar installed the Lord in his temple and continued to worship Him till he attained His abode.

## SIVA TEMPLE

The three pillars of Saivaism are the Temples, the scriptures and the Satgurus. These we revere, for they sustained preserve the ancient wisdom. Siva temples, whether they be small village sanctuaries or towering citadels, are esteemed as God's home and consecrated abode. In the Siva temple we draw close to God Siva and find a refuge from the world. His grace, permeating everywhere, is mostly known within the precincts of the Siva temple. It is in the purified milieu of the temple that the three worlds commune most perfectly. , that devotees can establish harmony with inner - plane spiritual beings. When the spiritual energy, sakti, invoked by the pooja, permeates the sanctum sanctorum and floods out to the world, Saivites know they are in a most holy place where God and the Gods commune with them. Within most Siva temples are private rooms, sanctums, for Lord Ganesha and Lord Karthikeya, and shrines for many Gods and saints. The Vedas explain , "Even as the radiance of the Sun enlightens all religions , above, below and slantwise, so that only God, glorious and worthy of worship, rules over all His creation." Aum Namasivaya .

The answer arises within you. You are here today because of your own choice. Your life and personality are the result of your past lives. All your past experiences, your past thoughts and actions have made you what you are in this life. You are caught in a cycle of births and deaths, a cycle which has resulted from the desires that sprang in you. But this life does not bring you a lasting reward. It gives you only a temporary enjoyment of the desires of your senses. But your senses are insatiable; Desires continue to grow.

Everyone in this world has an awakening sooner or later. Then you bring changes in your life breaking the ties of your past and controlling the senses. You begin to see yourself as a spark of the Divine residing in your physical body.

You begin to think that your body is only a vehicle in which you are making a journey towards God. You have to fuel your vehicle, you have to give it food. Remember, thoughts are the best food.

God is everywhere. God manifests Himself in many forms - in man, beast or bird. Wherever love flows, He is there, because God is love. Just you can only see the moon by the moon's light, you can see God only by God's light which is love.

Thoughts are creative forces. If your thoughts are pure, love flows and you have peace, joy and harmony. Never entertain negative thoughts like envy, hatred or anger, which will disturb your inner balance. Realise the fundamental truth that you and God are one and the calf running to its mother cow, hasten towards Him.

"Tat Twam Asi "

# A LEXICON

(for Tamil Hindu Children)

**Compiled by K. Rajendra**

| | |
|---|---|
| **Aadheenam** | Saivite Hindu Monastry |
| **Abhaya** | **Fear not. The raised right palm of the Deity** portrays this mudra |
| **Abishekam** | Ritual bathing of a Deity's idol |
| **Aachara** | Behaviour, good conduct |
| **Aacharya** | Teacher |
| **Adakkam** | Self restraint |
| **Adrishta** | Luck, destiny |
| **Agamas** | Scriptures containing anceint religous rituals |
| **Agastiya** | A sage who wrote the first grammar in Tamil |
| **Ahamkaara** | Ego or 'I' |
| **Ahilandeshwari** | Mother of the whole world |
| **Ahasa** | Space, sky |
| **Alayam** | Temple |
| **Alvars** | Group of saints who wrote devotinal songs |
| **Ambikai** | Goddess |
| **Amman** | Mother Goddess |
| **Amarar** | Deceased, an immortal |
| **Amirtham** | Ambrosia |
| **Ananda** | Bliss |
| **Anangu** | Damsel |
| **Anava malam** | The veil that enshrouds the soul, one of three bonds that bind the soul (Anavam, Karmam, Mayai) |
| **Andal** | A famous female saint, one of the Alvars |
| **Anihalan** | Ornament (jewells) |
| **Anjali** | Reverential welcome |
| **Anna prasana** | The first feeding of solids (rice) to an infant |
| **Anubhavam** | Experience, Religious perception |
| **Anugragam** | God's grace |
| **Antyeshti** | Rites performed to the departed soul after the death of a person |
| **Andakaranam** | Inner faculty (Mind, Intellect, Chitta and Ahangara) |
| **Appar** | Enduring term of father for Saint Thiru navukkarasar |

| | |
|---|---|
| **Arati** | The waving of a lamp with a flame before a Deity |
| **Archana** | A pooja |
| **Ardhanareeswara** | Lord Siva's manifestation as half male and half female connotes that there is no Siva without Sakti |
| **Arivai** | Beautiful damsel |
| **Arivali** | Educated person |
| **Arjuna** | Hero in Mahabharatha, one of the Pandavas, renowned for archery |
| **Arumuga Navalar** | Religious Sage who was respon sible for the rennaisance of Saivaism in Sri Lanka and South India |
| **Arunagirinathar** | Saint, Author of Thiruppugal, Kanthar Anupoothi etc. |
| **Asana** | Seat, a position in Yoga |

# MY DOUBTS AND THE ANSWERS

**Vithuran Ragunathan**

**New Malden**

***1.What beads do people hold in their hands whilst meditating?***

The beads are called Ruthradsham. Ruthra- Siva, Adsham - eye. The beads are supposed to be the tears that Lord Siva shed when he listened to the Theva's complaint. Usually there are 108 beads in the chain. Thus people use them to keep the count when they chant Moola mantra.

***2.Why do we wear ring on our right hand ring finger made of reeds while doing upayam at the temple?***

The reed is called Tharupai. Once you put them on your finger, you are protected from all the other events happening around you. Hence you would not be interrupted from conducting the pooja.

***3.Why do we ring bells just before and during the poosai?***

Bell ringing is to attract the peolpe's attention to the poosai. It is also useful during the poosai because it prevents you getting distracted by other noises.

***4.Why do we rub Thiruneeru on our forehead?***

Thiruneeru or Vipoothi is called holy ash. When we die, our body is cremated and all that remains is ash. Thiruneeru reminds us of this, tells us that our life is shortand encourages us to do good things.


***5.Why has Sivaperuman a third eye?***

The third eye on Sivaperuman's forehead is knowledge. By opening this eye, Sivaperuman removes all our evils and enriches our knowledges.


***6.Why do we have The nine Gods in temples?***

The nine Gods are called Navagraham. They are the planets having some influence in our life. For example Moon is supposed to have some influence on our mind. By praying them our life is made free of certain difficulties.

# SRI RAMAKRISHNA (Continued)




RAMAKRISHNA DURING THIS TIME WAS SO OBSESSED WITH THE THOUGHT OF ALLAH, HE FELT DISINCLINED TO STAY IN THE TEMPLE. HE SPENT ALL HIS TIME WITH THE MUSLIM TEACHER.




THE TEACHER READ TO HIM FROM THE KORAN AND TAUGHT HIM THE METHODS OF PRAYING TO ALLAH.

SRI RAMAKRISHNA REPEATED THE NAME OF ALLAH WORE A CLOTH LIKE THE MUSLIMS, SAID NAMAS FIVE TIMES DAILY AND FELT DISINCLINED EVEN TO SEE THE IMAGES OF THE HINDU GODS AND GODDESSES.




THREEE DAYS PASSED IN THAT MOOD. ONE DAY HE SAW THE VISION OF A RADIANT FIGURE, PROPHET MOHAMMAD, GENTLY APPROACHING HIM AND ENTERING HIS BODY. THUS HE REALISED THE GOD OF ISLAM.



# ESSENTIAL ETHICS OF THE TAMILS

# ULGA NEETHI

## உலக நீதி

## Universal words of wisdom

### Tamil Text: Verse No 12

கூறாக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேற் பூத்தேடி முடிக்க வேண்டாம்
துறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

## Transliteration


Kooraaki Otu Kudiyai-k-Kedukka Veindaam
Kondaimeil Pooththeidi Mudikka Veindaam
Thoorakki-th-Thalai Idduth Thitiya veindaam
Thuchanataay Thitivaatoadu Inanka Veindam
Veeraana Theivaththai Ikaza Veindaam
Vettriyulla Petiyaatai Verukka Veindaam
Maaraana Kuravatudai Valli Pankan
Mayileirum Petumaalai Vaazhthaay Nenchay

## Translation

Do not split apart a happy family. Do not wear flowers on your head so as to raise the height of your hair knot. Do not go about spreading bad rumours about others. Do not associate with those who lead an un-principled life. Do not be sacrilegious towards God who is powerful. Do not hate great people who are successful to. Oh! you heart, sing in praise of the peacock riding Lord who is the partner of the great Valli who hails from a gypsy tribe surrounded by enemies

**S. SRISKANDARAJAH-**

# Cross word



### CLUES

#### ACROSS


1. Celebration of three Sakthis (11)
5. Murugan's hand has it (3)
6. Seat of Sarasvathy and Luxmi (5)
8. Number of births of Vishnu (3)
9. The third member of Pandava (6)
11.Fire (4)
13. Hero of the Ramayana (4)
14. Disciple (6)
15. Yamuna (5)
18. Prelude in temple pooja rituals (10)
19. Holy river (5)
20. Viyasa is one (4)
21. Some say that this is the birth place of Hinduism (5)

#### DOWN

2. Sarasvathy's instrument (5)
3. Devotee of Siva who plays 2 down (6)
4. Indra's daughter or Murugan's wife (8)
7. Formost God (13)
10. Place where Meenakshi resides (7)
12. Number of nights in 1 across (4)
14. —— samayam (5)
16. Krishna used this to take the cows for grazing (5)
17. A person who believes in Hinduism (50

**Compiled by: *Hemavathy***

# அவன், அவள், அது




இந்த மூன்று சொற்களாற் சுட்டிக்காட்டக் கூடிய பொருள்கள் அனைத்தும் தோன்றி நின்று அழிவனவே. அவ்வாறு சுட்டிக் காட்ட இயலாதன அழிவில்லாத நித்தியப் பொருள்களாம்.

சைவ சித்தாந்தத்தில் அழிவு என்றால் பருப் பொருள் நுண் பொருளாக மாறுவதையே குறிக்கும்.

கண்களுக்குத் தெரிவன பருப் பொருள் (தூலம்)
தெரியாதன நுண்பொருள் (சூக்குமம்)

நுண்பொருளாக இருப்பது பருப் பொருளாக மாறுவதையே சற்காரிய வாதம் என்று சித்தாந்தம் கூறும் அதாவது உள்ளனவே தோன்றும் இல்லாதன தோன்றாது.

# பதி, பசு, பாசம்



ஆகிய மூன்றும் ஆதியும் அந்தமும் இல்லா நித்தியப் பொருள்கள் இதுவே சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. இம் மூன்றையும் தவிர வேறு மூன்று நித்தியப் பொருள்களும் உண்டு. அவை பின்னர் விளக்கம் பெறும்.

நுண்பொருளான உடம்பு முதலிய பாசப்பொருள்களைப் பருப் பொருளாகத் தோற்றுவித்தது யார்? ஏன்? எப்படி?

யார்?

1. தோற்றுவித்தது இறைவன்.

ஏன்?

2. அறியாமை ஆகிய இருளில் அழுந்திக்கிடந்த உயிர்களின் அறிவு விளக்கம் பெறுவதற்காக.

எப்படி?

3. சங்கற்பத்தால்— அதாவது நினைத்ததை உடனே தோற்றுவிக்கும் ஆற்றலால்— அதுவே இறைவனின் அருட்சக்தியாகும்.

# உதித்தனன் உலகம் உய்ய

பிரமம் நிலையானது. அழிவற்றது. தூயது. ஆதியும் அந்தமும் அற்றது. அடி முடி காணாத சோதி. தத்துவமானது. அகண்டாகார வஸ்து. அருவமும் உருவமும் ஆனது. அருவத்தில் உருவுமானது. ஒன்றாகவும் பலவாகவும் திகழ் வது. எல்லா உயிர்களிடத்தும் வியாபகமாய் உள்ளது. பிரமமே சிவன். சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சோதிச் சுடரே முருகன். இவ்வகையான இறைஞான தத்து வங்களை மாமேதை கச்சியப்ப சிவாசாரியார் அவர்கள் கந்தபுராணமாக இயற்றியருளினார்கள். புராணங்கள் இறைஞான தத்து வங்களை உள்ளடக்கியவை. புராணங்களிலுள்ள கதைகள் புழுகு அல்ல. மக்கள் மனதில் இறை பக்தி, தத்துவங்கள் நிலைத்து நின்று உணர்வதற்காக இயற்றப்பட்டவை. புராணங் களைக் கற்றோ, கேட்டோ அறிவதால் இறைபக்தி வளரும். யாழ்ப்பாணத்திற் கோவில்கள், மடங்கள் என்பவற்றிற் புராண பாராயணம் செய்வதற்கு ஆறுமுக நாவலர் அவர்கள் வழிகாட்டியாக இருந்தார்கள். இதனால் மக்கள் பயன் அடைந்தனர்.

முருகன் எனும் சொல் அழகு, இனிமை, மணம், இளமை எனும் பொருள்களைத் தன்னகத்தே கொண்டுளது. (முருகு அன்) தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லா வடிவுடைச் செம்மல். இளமை மணம் மாறாது என்றும் ஒரே வடிவத்தாய் விளங்கும் சோதி. **ஆயிரம் கோடி மன்மதனின் அழகு ஒன்றாகத் திரண்டாலும் முருகப் பெருமானின் அழகுக்கு ஈடாகுமோ** என்றான் சூரபன்மன். அரும்பெறல் மரபில் பெரும்பெயர் முருகா' என்றார் நக்கீரர். சேயோன் மேவிய மைவரை உலகம் என்கிறது பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியம். முருகன் குறிஞ்சி நிலக் கடவுள். தமிழ்த் தெய்வம். அசுரர்க் கரசனாகிய சூரபன்மன் சிவனை நோக்கிப் பலகாலம் கடுந்தவம் இயற்றி பல வரங்களையும் அழியா வரத்தையும் பெற்றான். அப்பொழுது நீ அறநெறியிற் தவறுவையேல் ஒரு சக்தியால் அழிவாய் என்று அருளினார் சிவபெருமான். காசிபமுனிவரதும் மாயையினதும் புதல்வர்கள் சூரபன்மன், சிங்கமுக அசுரன், தாரகாசூரன் என்போர். சூரபன்மன் தம்பியரோடு எல்லா உலகங்களையும் அடக்கி ஆண்டு செருக்குடன் இருந்தான். தேவர்களைப் பலவாறு துன்பு றுத்தினான். தேவர்கள் பொறுக்கலாற்றாது சிவனிடம் முறையிட்டனர். **'இன்பமும் துன்பமும், போக்கும் வரவும் இல்லா நிற்கும் பெருமானே! பரமகருணாநிதியே! இறைவா!** எங்கள் இடுக்கண் நீங்கும்பொருட்டு உமக்கு ஒப்பாக ஒரு திருக்குமாரனைத் தோற்றுவித்து அருள்க என விண்ணப்பம் செய்து தொழுது நின்றனர். சிவபெருமானும் கருணைகூர்ந்து தனது ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்யோஜாதம் அதோமுகம் எனும் ஆறு முகங்களிலுள்ள நெற்றிக் கண்களிலிருந்து உலகம் உய்யும் வண்ணம் ஆறு அக்கினிச் சுடர்களைத் தோற்று வித்து அருளினார். சிவனின் ஆணைப்படி அந்த ஜோதிப் பிழம்புகளை வாயுவும் அக்கினியும் கங்கையிற் கொண்டு சேர்த்தனர். கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையில் விடுப்ப ஆங்கு செந்தாமரை மலரின்கண் ஆறு திரு முகங்களும் பன்னிரு திருக்கைகளும் கொண்ட அருளுருத் தாங்கித் தோன்றியருளினார் முருகப் பெருமான். தேவர்கள் முருகனைத் தரிசித்துத் தங்கள் துயர் நீங்கியது என்று போற்றித் துதித்து நின்றனர். கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்து எம்பெருமானை வளருங்கள் என்றனர். கார்த்திகைப் பெண்களும் தங்கள் தவம் பலித்தது என்று எண்ணி, மகிழ்ந்து எம்பெருமானை வணங்கித் தொழுது நின்றனர். முருகப்பெருமானும் கருணை கூர்ந்து ஆறு குழந்தைகள் உருக்கொண்டார். கார்த்திகைப் பெண்கள் அவ் ஆறு குழந்தைகளையும் பாலுட்டிச் சிறப்பாக வளர்த்தனர். குழந்தைகள் யாவரும் மகிழும்படி சரவணத்திற் பல திருவிளையாடல்களையும் புரிந்தனர். சிவனும் உமையும் இடபாரூடராய் சரவணத்தில் எழுந்தருளினர். உமாசக்தி ஆறு திருக்குழந்தைகளையும் ஒன்றாக எடுத் துத் தழுவ முன்போல் ஒருருவாயினார் முருகப் பெருமான். உமாதேவியார் ஆறு திருவுருவங்களையும் ஒன்றாகச் சேர்த்ததாற் கந்தன் என்றும் இதுபோன்ற காரணப் பெயர்களாகச் சரவணன், கார்த்திகேயன், குகன், சேயோன், வேலன், காங்கேயன், சேனாபதி என்றும் ஒரு நாமம் இல்லாமற் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்புக்குப்

பல நாமங்கள். இவை உபசார வழக்கேயன்றி உண்மையல்ல.

கங்கையின் புதல்வன் என்றும் கார்த்திகை மைந்தன் என்றும்
செங்கண்மால் மருகன் என்றும் சேனையின் செல்வன் என்றும்
பங்கய முதல்வர் தேறாப் பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவுஞ் சொல்லல் ஏழ்மைப் பால தன்றோ!

... கந்தபுராணம்

முக்கட் பெருமான் உலகம் துயர் நீங்கி உய்யும் வண்ணம் மைந்தனாம் முருகனுக்கு ஞான சக்தியாகிய வேலை ஈந்தருளினார். முருகப்பெருமானும் தேவர்கள் துயர் நீங்கத் திருவுளம் கொண்டார். உலக வழக்கப்படி தேவர்களைச் சிறையிலிருந்து விடுமாறு வீரபாகுதேவரைத் தூதாகச் சூரபன்மனிடம் அனுப்பினார். சூரபன்மனோ தனது தவவலிமை யையும் மற்றும் பெருமைகளையும் கூறி, முருகனைப் பாலன் என்று எள்ளி நகையாடி தேவர்களைச் சிறை நீக்க மறுத்தனன். முருகப்பெருமானும் போர் செய்யத் திருவுளம் கொண்டு வீரபாகு முதலிய தம்பியருடனும் பூத கணங்களுடனும் புறப்பட்டார். இதை அறிந்த தாரகாசுரன் யுத்த சன்னத்தனாகி முருகப் பெருமானுடன் போர் புரிந்தான். அவனையும் அவனது மாயங்களுக்கு உதவியாக இருந்த கிரவுஞ்ச மலையையும் தமது வேலாயுதத்தால் அழித்தார் முருகப் பெருமான்.

சிங்கமுகாசுரன் சிறிது நல்லுணர்வு உடையவன். அவன் முருகனைப் பாலன் என்று எண்ணாதே, சிவனே முருகன், அவரது ஆற்றல் அளவிட ற்கரியது என்று அண்ணனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் எடுத்துரைத்தான். சூரனோ தன்னை எவரும் வெல்ல முடியாது, போர் செய்வதே துணிபு என்றான். சிங்கமுகாசுரனும் அண்ணனின் ஆணையை மேற்கொண்டு போருக்குப் போயினான். அவனும் போரில் இறந்தான். இவ்வாறே புதல்வர்களும் சுற்றமும் அழிந்தனர். சூரனும் போருக்குப் புறப்பட்டான். பல மாயங்களைச் செய்து முருகனுடன் போரிட்டான். அவனது மாயங்கள் எல்லாவற்றையும் தமது வேலாயுதத்தால் அழித்தார் முருகப்பெருமான். சூரனது மாயையும் ஆணவமும் குறைவடைய வைப்பதற்குச் சிறிது ஞானம் அருள எம்பெருமான் திருவுளம் கொண்டார். சூரபன்மனை நோக்கி, என்றும் அழிவில்லாத பெரிய வடிவத்தைக் கொள்வோம். உன் தவத்தாற் காணுதி' என்று மிகப் பெரிய திருவுருவம் கொண்டார். சூரன் அதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். நல்லுணர்வு பெற்றான். இக் குமரனைப் பாலன் என்று எண்ணினேனே, இவரே ஈசன் என்னும் தன்மையைக் கண்டேனே, உலகங்கள் சீவராசிகளெல்லாம் இவரிடத்துத் தோன்றுகின்றனவே, இப் பேரழகு கொண்ட விஸ்வரூபத்தின் ஒளியும் சீரும் இளமையுந்தான் என்னே! போர் இவரது திருவிளையாடலோ! இவருடன் போர் செய்தேனே! என்னே என் மடமை என்று பலவுஞ் சொல்லிக் கழிவிரக்கப்பட்டு நின்றான். சிறிது நேரத்தில் அவனது ஞானம் நீங்கியது. அவனோ ஆணவ மேலீட்டால் போரை நினைத்துக் கடல் நடுவே பெரிய மாமர ரூபம் எடுத்து நின்றான். முருகப்பெருமான் வேலாயுதத்தை ஏவிக் கடலை வற்றச் செய்து சூரனது மார்பையும் இரு கூறாக்கினார். வரத்தின் மகிமையால் சேவலும் மயிலுமாகி நின்றான் சூரபன்மன். எம்பெருமான் திருவருள் நோக்கஞ் செய்யப் பகைமை நீங்கி ஞானம் அடைந்த மனத்தோனாய் நின்றான். அப்பொழுது முருகப் பெருமான் மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றுத் திருவருள் புரிந்தார்.

**மலர்மகள்**

மாயையின் மகனுமன்றோ வரம்பிலா
அருள்பெற் றுய்ந்தான் ... கந்தபுராணம்

நிக்கிரக அநுக்கிரக தத்துவம் கடவுள் தன்மை. எத்துணைத் தீயோராயினும் அகவிருள் நீங்கி இயைவன் முன் நின்றால் மேற்கதி அடைவர். பாசம் ஆன்மாக்களைக் கட்டி நிற்கும் தளை என்பது கடவுள் தத்துவத்தை ஆராய்ந்து அறிந்த சைவஞானிகளின் கருத்து. பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று. ஆணவமலம் மூலமலம். ஆணவ மலத்தினாலேயே எல்லாத் துன்பங்களும் விளைகின்றன. தக்கன் பெருந்தவம் ஈட்டி இறைவியை மகளாகப் பெற்றும் ஆணவத்தால் அழிந்தொழிந்தான். சூரபன்மன் ஆணவமலம், சிங்கன் கன்ம மலம், தாரகன் மாயை, கிரவுஞ்ச மலை வினைத்தொகுதி. கடல் பிறவித்துன்பம். சக்தி இப் பாசத்தை அழித்து உயிருக்கு நற்கதி அருளும். நிக்கிரக அநுக்கிரகம் செய்து உயிர்களை நல் வழியில் நடத்தி ஈடேற்றுவதற்கென்று தோன்றியதே முருகமூர்த்தம். இவை கந்தபுரா


ணத்திற் காணப்படுபவை.

இந்த அரிய மானுடப் பிறவியில் உயிரின் உய்வைத் தேட முயலவேண்டும். கந்தன் கலியுகவரதன். எம்பெருமான் அருளைவாரி வழங்கும் பிரபந்தங்கள், கந்தபுராணம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் எனப்பல. முருகப்பெருமான் திருவடிகளைப் போற்றித் தொழுது துதிப்பதனால் இகம்பரம் இரண்டிற்கும் நன்மை பெறலாம். முருகன் கைவேல் கூரியது. அஞ்ஞானத்தைப் போரிட்டு விரட்டுவது.

அஞ்சமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

வினை ஓட விடுங்கதிர் வேல் மறவேன் வேலுண்டு வினையில்லை பிரபஞ்சமெனும் சேற்றைக் கழிய வழிவிட்டவாஇத் திருவாக்குகளை உற்று நோக்குக இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக நிற்கும் எந்தை கந்தப் பெருமானின் திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு உய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்.**




# திருமணமா? அல்லது விசேட வைபவங்களா?

உங்கள் தேவைகளான
மணவறை, பூமாலைகள்
பூக்கொத்துகள்
வீடியோப் படப்பிடிப்புகள்
ஆகியவற்றுக்கு எங்களை அணுகுங்கள்

Our Services extensively covers any part of europe Carland & Bouquets are made out of fresh flowers. These will be despatched to any part of Europe by air.

For further details contact
Ganesh 0181 561 0394 or
Siva 0181 574 4463.

NIRALA

தரமான இனிப்புணவுகளைத் தரும்
ஒரே ஸ்தாபனம்

**We are proud to serve the community**
**Caters for weddings & Parties**
**100% pure vegetarian sweets & savouries**

NIRALA SWEETS LONDON
316 HIGH STREET NORTH, MANOR PARK
LONDON E12 6SA
**Tel : 0181 548 1303/ 0181 548 1350**
**Fax : 0181 548 1363**

**2nd Branch**
225 HOE STREET, WALTHAMSTOW E17

# அணங்கினர் ஆயம்

*அணங்கினர் ஆயத்தை இறையருள்*
*பெற்ற மகளிரும் இறையடியார்களின்*
*அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால்*
*அறியப்படாத மாதரும் பொலிவிப்பர்.*
*அவற்றுடன் பெண்கள்*
*விரும்பும் கலைகளும்*
*அதில் சிறந்துவிளங்கிய பாடல்களும்*
*சிறுகுறிப்புகளும் அலங்கரிக்கும்*
**-சாலினி -**

## மனைவி எனும் அருளமுதம்

அருணகிரிநாதர் திருப்புகழில் 'ஆயிரத்தி இருநூறு மறையோரும் வாழும் உத்தரமேரூர்' எனப் பெருமையாகப் பாடிய புகழுடையது உத்தரமேரூர். செங்கற்பட்டு மாவட்டத்தில் வந்தவாசி, ஆரணி, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களுக்கு நடுவே இவ்வூர் இருக்கிறது. (சென்னையிலிருந்து 80 கி.மீ தூரம்) இங்கு அரண்மனைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அரண்மனைமேடு, ராஜாமேடு போன்ற இடங்களிற் பழைய கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. உத்தரவர்மன் என்ற பல்லவ மன்னன் பெயரால் உத்தரமேரூர் என அழைக்கப்படுகின்றது. சமய நூல்களில் மகாமேருசைலம், தசாவதார க்ஷேத்திரம், ஹரிஹரபுரி, ஆதித்யபுரி, சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களில் இவ்வூர் இடம்பெறுகின்றது. இத்தகைய புகழ் வாய்ந்த உத்தரமேரூரில் அறிவாகரன் என்னும் புலவரும், அவர் மனைவி சந்திரகாந்தமும் வாழ்ந்து வந்தார்கள். அறிவா-கரன் அரசவைப் புலவர்களிற் தலைமைப் புலவனாக இருந்தார். புலவரின் மனைவியையும் நங்கைநல்லாள் என்று ஊரே போற்றியது.

சந்திரகாந்தம் தன் பெற்றோர் வீட்டிற்குச் சென்றிருந்த நேரம் அரசவையிற் புலவர்கள் கூடினார்கள். அங்குவந்த அரசன் புலவர்களைப் பார்த்து, 'பிறந்ததும் அசையாப் பெற்றியது எது? பேரொளியின் திறன் அறிந்து ஓதுவது எது?' என்று கேட்டான். புலவர்கள் யாருமே அதற்குப் பதில் கூறவில்லை. 'நாளை மாலைக்குள் இதற்கான பதிலைச் சொல்லவில்லையானால் உங்களைச் சிரச்சேதம் செய்வேன்' என்று அரசன் கூறிச்சென்றான். கவலையோடு வீடுவந்த புலவர்கள் அரசனின் கேள்விக்கு விடைகாண முடியாததால் ஊரை விட்டே போக முடிவெடுத்தார்கள். அறிவாகரனையும் தம்முடன் வரும்படி கேட்டார்கள். அதற்கு அவன், 'தலைமைப் புலவனான நான் இவ்வூரை விட்டு ஓடுவது நான் பிறந்த ஊருக்கே இழுக்கு. நீங்கள் போவதானாற் போங்கள்' என்றான். இரவோடு இரவாக மற்றப் புலவர்கள் யாவரும் ஊரைவிட்டே ஓடினார்கள். மறுநாட் காலை அறிவாகரன் மட்டும் அரசவைக்குப் போனார். அவர் போனபின் பெற்றோரைப் பார்க்கச் சென்ற சந்திரகாந்தம் வீட்டிற்கு வந்தாள்.

அவள் வருவதைத் தலைநிறையத் தாழம்பூ வைத்துக்கொண்டு மயில்களுடன் விளையாடிய பெண்கள் கண்டார்கள். 'என்னடி இது? இவள் கணவன் தலை உருளப்போகுந் நேரத்தில் சீவிச் சிங்காரித்து, ஆடி அசைந்து வருகிறாளே! இவள் தாலி தங்குமா?' எனக் கேலிசெய்து சிரித்தார்கள். இதைக்கேட்ட சந்திரகாந்தத்திற்கு ஆத்திரமும் அழுகையும் ஒன்றாக வந்தது. 'என்ன சொன்னீர்கள்? என் தாலியா தங்காது? இந்த ஊர்ப் பெண்கள்தான் எல்லை தாண்டி வாழ மாட்டார்கள். அவர்கள் தாலிதான் தங்காது. மயில்கள் இந்த ஊரில் வாழாது. தாழம்பூ பூக்காது' எனச் சாபமிட்டாள்.

தன் கணவனுக்கு நடக்கவிருக்கும் விபரீதம் அறிந்து அரசவைக்கு ஓடினாள். அரசனைச் சென்று பார்த்து 'உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன், பிறந்ததும் அசையாதிருப்பது முட்டை, பேரொளியான கதிரவனின் வரவு அறிந்து கூவுவது சேவல்- என் கணவன் உயிரை எனக்குத் தாரும்' என்றாள்.

அவள் பதிலைக் கேட்ட அரசன் மகிழ்ந்து 'என் கேள்விக்குப் பதிலைத் தலைமைப் புலவனான உன் கணவன் கூறவில்லை. எனவே நான் விதித்த தண்டனைப்படி அவன் இறந்தே யாகவேண்டும். பதிலை நீ கூறியதால் உன் விருப்பப்படி அதனை நிறைவேற்றுகிறேன்' என்றான். அவள் 'என் கணவன் இயற்கையாக என்று இறக்கிறானோ அன்று இறக்கட்டும்.

அன்றே உங்கள் தண்டனை நிறைவுபெறும் என்றாள். அவளது அறிவுத்திறனை மெச்சிய அரசன் அவளைத் தன் ராஜதந்திரியாக நியமித்தான். அறிவாகரனும் மனைவி எனும் அருளமுதத்தால் இன்றும் உயிர்வாழ்கிறான்.

பின்குறிப்பு:

இன்றும் அவ்வூர் எல்லைக்குட் தாழை பூப்பதில்லை. (உத்தரமேரூர் எல்லையைத் தாண்டினால் தாழம்பூ வாசனையை நுகரலாம்). மயில்களை வளர்த்தாலும் அவை பிழைப்பதில்லை. வெளியூரிற் திருமணமாகும் பெண்கள் அமங்கலையாக வீடு திரும்புகிறார்கள். இதற்காக அவள் குளித்ததாகக் கூறப்படும் 'நங்கை குளத்தில்' நீராடி, சிவன் கோயிலில் இரட்டைத் தாலியிட்டு வணங்கிய பின்பே திருமணம் செய்கிறார்கள். இவ்வூரின் மேற்கே பெருமாள் கோயிலும் வடகிழக்கே சிவன் கோயிலும் இருக்கின்றன.

# கலசம் சஞ்சிகையூடு ஒரு கருத்துப் பரிமாறல்

**அரங்க முருகையன்**

தை, மாசி, பங்குனி 1997 கலசம் இதழ் ஆசிரியர் உரை உருக்கமானதாக இருந்தது. ஏன்? ஏன்? என்று கேட் டாலே நம் சிந்தனை விரிவடைந்து அதன் பயனாகத் தக்க விடை கிடைக்கும்.

பெண்கள் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்று எந்த நூலிலும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவில்லை. தமிழர்கள் முன்னாளிலும் சரி, இந்நாளிலும் சரி, பெண்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கி வந்திருக்கிறார்கள். தமிழையே அணங்கு என்கிறோம். தமிழ் என்றதுமே நமக்கு ஔவையார்தான் நினைவுக்கு வருகிறார். (ஔவைக் கிழவி நம் கிழவி, அமுதினும் இனிய சொற் கிழவி) பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த இருபெரும் தமிழ்ப் புலவர்களான ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்பாருள் யார் மிகுந்த புலமையும் திறனும் உடையவர் என்பதைக் கண்டறியும் நடுவர் பொறுப்பு ஒரு பெண்ணான ஔவையாரிடந்தான் தரப்பட்டது. இப்போதுங்கூடத் தமிழ்நாட்டில் சில சிற்றூர்க் (மாரியம்மன்) கோயில்களிற் திருவிழாக் காலமல்லாத நேரங்களில் அகவை முதிர்ந்த வாழ்க்கைப் பட்டறிவுடைய மூதாட்டிகளே பூசைசெய்யும் பொறுப்புடையோராய் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். (கிறித்தவ மாதா கோயில்களில் வழிபாடு நடத்தும் பொறுப்பு பெண்களுக்குத் தரக்கூடாதென்று இப்போதுகூட நாகரிகத்திற் திளைக்கும் முன்னேறிய நாட்டினரிடையே வலுவான கருத்து வேறுபாடு இருக்கிறது) பெண்கள் அவர்களுக்கே உரிய அடக்கத்தினாலும் நாணத்தாலும் பஞ்சபுராணம் பாட முன்வராமல் இருக்கலாம். பொதுவாக, அத்தகைய வாய்ப்பை ஆண்கள் முனைந்து தாங்களே எடுத்துக்கொள்வதும் பெண்களைப் பஞ்ச புராணம் பாட ஊக்குவிக்காததும் காரணங்களாய் இருக்கலாம்.இனியேனும் நாம் பெண்களைப் பஞ்சபுராணம் பாட ஊக்குவிக்கவேண்டும்.

பெண்களைத் தேர்வடம் பிடிக்க அநுமதிக்காததற்குக் காரணம் அவர்களின் (பெண்களின்)மெல்லியல்பேயாம். பெண்களைப் பொதுவாக மயானத்துக்கு வர ஊக்குவிப்பதில்லை. பல பகுதிகளிற் பெண்கள் சுடுகாடு, இடுகாடுகளுக்குச் செல்லக்கூடாது என்ற தடையும் உள்ளது. எடுத்துக்காட்டாக,

மெத்த விழியம்பு நீர் ஒழுகுமாதர் <u>வீதிமட்டுமே</u>
சுற்றமும் மற்றவரும் மயானம் மட்டுமே
அர்த்தமும் வாழ்வும் அகத்து மட்டுமே
பற்றித் தொடரும் இருவினை பாவ புண்ணியமே!

மற்றும் இதே பொருளுடைய

வீடுவரை உறவு <u>வீதிவரை மனைவி</u>
காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ?

என்று பட்டினத்தார் பாடலைத் தழுவிக் கண்ணதாசன் எழுதிய பாடலையும் ஒப்பு நோக்குக.

இத்தகைய கொள்கைக்குக் காரணம் பெண்டிரின் ஈன்று புறந்தரும் சீரிய செயலே! மகவைப் பெற்று வளர்த்து ஆக்கும் அரிய பணி புரிவோரை இடுகாட்டுக்குச் செல்லவிடல் தகாததாகக் கருதப்பட்டதே என்றால் மிகையாகாது. தவிரவும் மென்மையான தாய்மைக் குணமுடைய பெண்டிர் அச்சம் தரும் (பிணம் எரிதல் போன்ற) காட்சிகளுடைய சுடுகாட்டுச் சூழல்களைப் பார்த்து அஞ்சி அதன்விளைவாக அவர்கள் மனத்தொல்லை உறவும் கூடும். ஆனால் இந்நாளில் எல்லாம் மாறிவிட்டது. பெண்கள் இடுகாடு, சுடுகாடுகளுக்குச் செல்வது மட்டுமன்றி சவ அடக்க நெறிமுறைகளையும் நடத்துகிறார்கள். கலசம் வாசகர்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

# THE MYSTERY OF INDIVIDUALTY

## The Story of Sithathan

There once lived a wise man, who renowned for his wonderful work was a great Yogi as well as a writer of books and pamphlets . As he grew old in years he became worried as to whom should he leave his sacred writings, for within them the way of great knowledge, miracles and powers were portrayed. Although he had a son of his own,he considered him to be only heir of his body,and was therefore greatly troubled as to whom he should pass on his great knowledge and works.

When he was young man he prayed ardently to the Divine to show him what to do . As he grew to old age and his heart softened, he knew that the time was arriving when he should lay himself down in the sleep of death.

Day and night;even within his dreams he continued his quest, seeking an answer; "To whom,O Lord shall I leave the source of my powers?" Often there was no answer to his question; the darkness of his dream was wordless. But one night his bright soul moved outwards. It lifted and travelled until it came to a small hut, where,in the stillness of the night it touched a sleeping form,and in that instant lights joined.

On opening his eyes the next day the wise man felt as if a weight had been lifted from his soul. So he sent for the son of his body,confiding in him the dilemma that had consumed his life. Opening a great chest which held the sacred books of mysteries the old man put away all the pain of wondering. Grief was no longer part of his life now a solution had been found. Thus he gave his son this order:

" My dear son,this is your destiny, you have to live in this world. If you understand you will not feel the sorrow of it. I request you to take all these sacred writings to Sithathan the son of Nathan, they now belong to him. I have taught you well,you are a dutiful son.You should regard it as God's grace if Sithathan shows willingness to study along with thee. It is meaningful that you remain humble at all times, for you are nothing but a messenger chosen by the Divine One to carry a message. Providing you continue to live in this world with a humble spirit the time will arrive when you will understand why you have been chosen."

On saying these words the wise old man lay himself down and passed away into death. The son,who faithfully arranged his father's funeral,was faithful to his last command, and set out on his journey to the house of Nathan. He had always been an obedient son, following his father in all matters, and he now relied on his father's soul to lead him on his own life's journey.

On his arrival in the town, many people came to do him honour, for they knew he was the son of the wise man. He found it easy to live amongst these good people as he searched for the son of Nathan. He eventually found the boy, who, aged fourteen years, was holding a small post,caring for the cattle within the Temple premises. Though the boy behaved in public as was fitting his years, the wise man's son was soon aware that in his childish ways this young boy hid from the curiosity of others a secret grace.

So he sought a way that he might approach the boy. Going to the Chief priest of the Temple he requested a quiet place wher he might persue in quietness his yogic practices and the study of ancient wisdom, and requested that Sithathan the son of Nathan be granted to him as a disciple. The Chief Priest was well content with this request,regarding it as an honour that one of them be required to be in the company of the son of the wise man.

The wise man's son appeared to be absorbed in the study of the holy works,paying no attention

to his surroundings. The young boy was very glad about this,for every night he was accustomed to give himself to his own studies,while everyone else was fast asleep. The elder was on the watch for everything the young boy did . One night, when Sithathan had laid down to rest on his bed,the other rose and took a page from one of his father's sacred writings and lay it on the boy's chest. Then he quickly returned to his own couch and lay down as if in deep sleep.

After sometime he saw Sithathan turn,and in his sleep stretch out both hands and take hold of the page.Then rising from his bed he hurried over to his oil lamp and buried himself in the content. At last the boy placed the page in his garment and fell onto his couch. After this episode the wise man's son never ceased to watch the boy,and when he arrived at the certainty that he could delay no longer to disclose his mission to him, he said:

"I gave you something,that in the course of our life has seldom been in mortal hands. Before you very few have held it. It was buried for centuries,then it rose gain to spread it's power into this world of form. My father was one of these few who were fed from the stream of it's power. Now by secret endowment it belongs to you, and if you will be gracious to me,when you spend your time on these sacred writings,let my poor soul be the air and my ear absorb your word which otherwise would escape from this world of form".And the boy agreed to this saying: " I trust you to keep silent so that none, only you and I shall know of this matter."

So it was that in order to retain secrecy, the young boy and the wise man's son left the Temple premises and went to live in a cave outside the town. All of the town people took it as a favour that Nathan's son should be taken under the care of the older man; allowing him to take part in all his teachings; and not knowing otherwise,they ascribed all the merits of the wise man on to his son.

Immersed in their solitude where the voices of the earth are silent, the books of the wise man took on a sweetness where the spirits and the splendour of the Divine emerged. The young boy devoted himself to the wonderful scriptures, taking them into his soul. But although he took great pleasure in the time spent with the young sage, the wise man's son was not content spending all his time dwelling in the cave, somehow, although he could not account for it, he had a deep inner feeling a longing to move into the world and test the informtion which emerged from the ancent scriptures.As his yearning increased, he became sombre in countenance. And when the young sage inquired to the cause of his unhappiness he replied:

"Master, it appears my soul is not as immaculate as yours! I cannot help it for what enters yours as sweetness seems to enter mine like a laceration. Within me doubts gather themselves, and never silent they call me to do many things. I ask you,let us now move out into the world and put these wonders to the test".But the young Sithathan shuddered at these words replying: "Do not I pray disturb the humility of our waiting, The time is not ready for us to use this knowledge."

Thus the wise man's son sank back disappointed, but recollecting his father's last words he was content to wait. Even so, as the years passed he become even more sadder in countenance. The young sage, who had intense affection for the older man sought an answer to the problem. He had been within the cave for many years controlling his mind and body, meditating and reading the Divine scriptures.Then, one day , with his face shining resplendent like the sun, he told the older man to prepare in readiness for what lay ahead, and they emerged together from out of the cave.

Walking for many days enjoying the sights and sounds of the countryside they eventually they came to a large valley with a deep gorge. Hanging head downwards, from thin threads, suspended from a beam of woven straw were a number of emaciated holy men. There also, squatting on top of the straw sat a large rodent, busily absorbed, trying to bite through each

strand of straw with it's sharp teeth. It was obvious, if the rat succeeded in chewing through the thread the thin men would fall into the deep chasm. Seeing the the holy men in this miserable state, The young sage folded his hands in supplication and approached them asking;

"Who are you and why are you in this miserable condition? Do you not know it the rat succeeds in biting through the straw you will all fall into the fathomless pit of oblivion? Please answer me for I am ready to give you any assistance you require. Therefore, tell me without reservation what I can do to help you. Surely it is my duty to come to your rescue when you are in such great trouble? Surely my knowledge and wisdom, the fruits of my penance are of no avail unless I can help my fellow man?

"Sweet lad", they replied," what use is your penance to us or to the world, you need not sacrifice it at all. Look inwardly,see for yourself; the straw we hang from is the Thread of Life; the rat is Yama. Do you not understand that you are also suspended on a thread. Just as we fall down from heaven,which we reached by means of our penance, so also will you fall down into the pit unless you fulfill your destiny in this life. No penance and no sacrifice,can give one the glory that is obtained by fulfilling one's role in life. If you want to put your knowledge and wisdom to good use first fulfil your karmic destiny by putting sacred knowledge to good use in this world of form".

On hearing these words, Sithathan the son of Nathan prostrated himself before the holy men At that very moment there arose a brilliant dawning. Beams of Divine Light brightened his soul revealing the Sacred Message of the meaning of mortal life on this earth. He understood immediately that the life he had lived in the cave was no longer for him . The time had come to set aside old ways and put the sacred scriptures to good use. The vaults of his soul were filled with a magical command full of grace, informing him of the journey ahead.From that age he served the earth.

Divine messages from above came to him in streams of gold. The voice of the suffering merged into a single stream, reaching him from the mouths of all living things. He gave unceasingly his Divine gift of deep consolation, and with the touch of his hands he healed the wounds of the suffering. Around him he built, by the wide sphere of his activities,a natural circle of things that were destined to be set free. He could be found amongst the people, and was a teacher to them all, and although he spoke rarely; appearing hesitent to utter words of wisdom, one could perhaps be luckly enough to hear him speak. It was from one such rare occasion, when he was seated and talking to his disciples and friends who had come to visit him that the following words of wonder were obtained:-

" It is true what you say, all individuals are the abodes of wondering souls. These souls live in many existences,and struggle in one shape or another towards completion. Those who are unable to purify themselves here;in this life, who are caught in the world of entanglement, are housed in many places,where they await the time of restarting again. This,my friend, is the meaning of life, for it is given to mankind to live and live again until we work out our salvation. Eventually, by so doing; when we understand the way forward, through Divine grace, we use our recreated energy to lift up the fallen and set free the imprisoned.We are not meant merely to wait for this to happen,mankind is born to help for the redemption of the whole world .All men are waiting to be set free. I tell you it is the one who is able to raise the Soul so that it can see for itself the spark of Divine Holiness that leads it to freedom".

He then looked around from where he was sitting, with a smile beaming on his face as he looked at his friend, the son of the wise man who was sitting by his side.Around him were gathered many disciples and devotees who had come to think of him as their teacher. He beckoned us to move even closer, for where at first there had been only a few people, many had

gathered to listen to his words, knowing they came from the deep fathoms of his soul. When all was silent once more the great sage spoke again:.

" Truely, mankind can seek the Divine by meditating on the Divine nature. Nevertheless, just as man seeks God in solitary fervour, there is also a high service which the community alone can fulfil. Just as a man achieves something prodigious by his everyday actions,but not by himself alone;because he requires the world and things in order to perform those actions, the individuality of man is even so manifested by his life with others.For the more a man is truly individual the more he can give to others,and the more he will give to them. The individual sees God and embraces him. The Individual is not a whole but a part,and the purer and the more perfect he is,the more intensely aware is he of being a part.Then the feeling of the community of existence is the more awake in him.

He who in this way lives with others,in his own action realises the truth that all souls are one,for each is a part of the Universal Soul,and the whole of the Universal Soul is in each of these souls. Thus, it is the Humble Soul who is the righteous,the loving,and the helper,who fulfills his destiny.This is the mystery of individuality and belonging to the whole. With his every action the individual can work for the glory of God,so that the Divine may step from that hidden place and the individual can become part of that Eternity".

Then he stopped speaking. All hearts were moved. Over all brows there hung a glory of the everlasting ways of transformation.

# திருமந்திரம்

தான் தவம் செய்வதாம் செய்தவத்தவழி
மான் தெய்வமாக மதிக்கும் மனிதர்கள்
ஊன் தெய்வமாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான் தெய்வமென்று நமன் வருவானே

பொருள்:
மான் - தவ வழியிலுள்ள ஜீவேஸ்வரன்
ஊன் - அழியும் உடம்பு
உயிர்க்கின்ற- உயிர் வாழும் மனிதர்க்கு
தான்தெய்வமென்று- தானே தெய்வமென்று
யமன் வருவான்.


New / Renewal

## கலசம் சந்தாப் படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான (பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name: ....................................
Address:..................................
.. ................................
..........................................

Subscription for 2 years
UK - £10.00 only
Europe- £14.00 only
Others- £22.00 only

NO STAMP NEEDED - WE PAY THE POSTAGE
KALASAM
FREEPOST
3 THE ORCHARD
WICKFORD
ESSEX, SS12 9BR

# பிரம்மஞானமும் விஞ்ஞானமும்

-டாக்டர் அழகர் ராமானுஜம் -

## சென்ற இதழ்த் தொடர்ச்சி

பிரம்மஞானம் என்ற இந்த ஞானம் இந்த நூற்றா ண்டின் ஒரு தலை சிறந்த ஞானம் என்றுதான் நான் சொல்லுவேன். இந்தப் பிரம்ம ஞானத்தைத் தொகுத்து மிக எளிதாக்கி நமக்கு அளித்தவர் யார் என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம். இந்திய நாட்டில் எத்தனையோ மகான்கள் வந்திருக்கின்றார்கள். அரண்ம னையில் வாழ்ந்த சித்தார்த்தர் புத்தரானது இந்திய நாட்டிலேதான். இந்து சமயத்துக்கு ஆதாரத் தூண்களாக விளங்குகின்ற ஆதிசங்கரர், இராமாநுஜர், மத்துவர் வந்தது அந்தத் தென்னிந்திய மண்ணிலேதான். ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது பக்தி இலக்கியத்தைப் பரப்பிய மண் அந்த இந்திய மண். பின்பு திருவள்ளுவர், வள்ளலார், மகாத்மா காந்தி என்று பல மகான்கள் வந்த மண் இந்த இந்திய மண். மகான்கள் வந்தவண்ணமே இருப்பார்கள் என்று கீதையிற் கண்ணன் கூறுவான். அதன்படி இன்று நம்மிடையே இந்திய மண்ணில் ஒரு பெரிய மகான், சிந்தனையாளர் வாழ்ந்து வருகிறார். அவர்தான் எனது ஆசான் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள். அவர்கள் நமக்கு இந்துமதத்தின் சாரமாகக் கொடுத்திருப்பதுதான் பிரம்ம ஞானம். எப்பொ ழுதும் தர்மங்கள் குறையும்போதும் அதர்மங்கள் விஞ்சி அதிகமாகும்போதும் நான் வருவேன், வந்து கொண்டே இருப்பேன் என்று கண்ணன் கீதையிற் கூறுவான். பரித்ராணாய ஸாதுனாம் விநாஷாயச துஸ்கிருதாம் தர்மஸம்தாபனாதாய ஸம்பவாமி யுகே யுகே என்று கூறுவான் கண் ணன்.கண்ணனின் அந்தக் கூற்றுக்கமைய வந்த மகான்களின் வரிசையில் வந்தவர்தான் யோகிராஜ்
வேதாத்திரி மகரிஷி அவர்கள். அவர்கள் அளித்திருக்கிற இந்தப் பிரமஞானம் இந்த நூற்றா ண்டின் ஒரு தலைசிறந்த ஞானம். இது முற்றிலும் விஞ்ஞான பூர்வமானது. இந்த பிரமஞானத்தில் உள்ள விஞ்ஞானமென்ன என்று நாம் பார்க்கும் போது மறுபடியும் நாம் இந்தப் பிரபஞ்சத்தை நோக்குகிறோம்.

ஏற்கெனவே நான் கூறியபடி இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு நியதி இருக்கிறது. ஓர் ஒழுங்கு இருக்கிறது. இதைத் தவிர இந்தப் பிரபஞ்சத்தில் மற்றும் ஒரு குணமும் உண்டு. இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்கிற எந்த ஓர் அமைப்பும் சதா மாறிக் கொண்டே இருக்கிறது. எதுவுமே நிலையாக நிற்பதில்லை. கோள்கள் நிலையாக நிற்ப தில்லை. தமது இடத்தை மாற்றிக்கொண்டே இருக்கின்றன. நேற்றைய மனிதன் நான், இன்று இல்லை. இன்றைய நான் நாளை இருக்கப் போவதில்லை. ஆக சதா ஒரு மாற்றத்தைத்தான் நாம் இந்தப் பிரபஞ்சத்திற் காண்கிறோம். ஒரு முறை கிரேக்க மேதை ஹராகுலிற்றஸ் இடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. What is that which is permanent in this world? இந்த உலகில் எது நிரந்தரமானது என்பதுதான் அந்தக் கேள்வி. அதற்கு ஹராகுலிற்றஸ் கூறிய பதில், Change alone is permanent!. மாற்றமே நிலையானது. நமது பிரபஞ்சத்தில் சதா காலமும் ஏதாவது ஒரு மாற் றம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. மாற்றம் நிகழும்போது நாம் இன்னொரு உண்மையையும் காணவேண்டும். உதாரணமாக என்னை எடுத்துக் கொண்டால் என்னில் சதா ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இந்த மாற்றம் எதை நோக்கிப் போகிறது! எனது பிறப்பிலிருந்து இற ப்பை நோக்கி இந்த மாற்றம் நிகழ்ந்து கொண் டிருக்கிறது. ஆக எந்தவொரு பொருள் மாற்றம் அடைகின்றதோ அது ஒரு காலகட்டத்தில் பிறந்திருக்க வேண்டும், ஒரு காலகட்டத்தில் முடியவும் வேண்டும். ஆகவே சதா காலமும் மாற்றம் அடைந்து கொண்டிருக்கிற இந்தப் பிரப ஞ்சமே ஒரு காலகட்டத்திற் பிறந்திருக்க வேண்டும். ஒரு காலகட்டத்தில் முடியவும் வேண்டும்.

அப்படியென்றால் நாம் காண்கின்ற இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பு இருந்த நிலை என்ன என்ற கேள்விக்கு வருகிறோம்.

நாம் காண்கின்ற இந்தக் கோள்கள், நட்சத்திரங்கள், சூரியன், மரங்கள், பறவைகள் என்ற எதுவுமே இல்லாதிருந்த போது இங்கு இருந்த நிலைஎன்ன? என்பதற்கு அப்பொழுது இருந்த நிலைதான் பிரமஞானத்தில் சுத்தவெளி என்று மகரிஷி அவர்கள் கூறுவார்கள். (Static space) அந்தச் சுத்த வெளியாக இருந்த Static Space இலிருந்துதான் நமது பிரபஞ்சம் தனது பரிணாமத்தை ஆரம்பி த்திருக்கிறது.இதைச் சற்றுப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஓர் உதாரணத்திற்கு வருகி றோம். ஓங்கி வளர்ந்துள்ள ஓர் ஆலமரத்தை எடுத்துக் கொள்வோம்.அந்த ஆலமர முன்பு நின்று நாம் பார்க்கும்போது பெரிதாக ஓங்கி வளர்ந்தி ருக்கிறது.ஆனாலும் அந்த ஆலமரம் ஒரு காலத் தில் ஒரு சிறிய விதைக்குட்தானே இருந்தது? . ஆக ஒரு சின்னஞ்சிறிய விதைக்குள் இருந்து தானே அந்த ஆலமரம் உருவாகியிருக்கிறது? விதையாக இருந்தபோது அதனுடைய அம்சங்கள் என்ன? இரண்டு அம்சங்களை நாம் கூறலாம். அந்த ஆலமரத்தை இவ்வாறுதான் உருவாக்க வேண்டும் என்ற அறிவு (Blue print) அந்த விதை க்கு உண்டு. இன்னொன்று அந்த ஆலமரத்தை உருவாக்குவதற்கான ஆற்றலும் அந்த விதைக்கு உண்டு. ஆக அந்த விை-தயில் நாம் காண்பது இரண்டு அம்சங்கள். ஒன்று அறிவு, இன்னொன்று ஆற்றல். அதேமாதிரியாக இப் பிரபஞ்சத்தையே உருவாக்கிய, இந்தப் பிரபஞ்சத்துக்கே விை-தயாக இருந்த சுத்தவெளிக்கும் இரண்டு அம்சங்கள் உண்டு. என்னென்ன அம்சங்கள்? இந்தப் பிரபஞ்சத்தை எவ்வாறு உருவாக்கவேண்டும், இந்தப் பிரபஞ்சத்தை இவ்வாறுதான் உருவாக்க வேண்டும் என்ற அறிவு (Blue print) அதில் இருந்தது. இந்தப் பிரபஞ்சத்தை உரு வாக்குவ தற்கான ஆற்றலும் அதில் இருந்தது. ஆக அந்தச் சுத்தவெளி அல்லது static space என்று சொல்கிற அந்த ஆதி நிலைக்கு நாம் விஞ்ஞான பூர்வமாகத் தருகிற குணங்கள் இரண்டு.

ஒன்று பேரறிவு. இன்னொன்று பேராற்றல். இதையே நமது இந்து சமயத்துக்கு வரும்போது, அறிவு என்பதை சமஸ்கிருதத்தில் புருஷா என்பார்கள். ஆற்றல் என்பதை சமஸ்கிருதத்தில் ப்ரகிருதி என்பார்கள். இதையே இந்துமதத்தில் புருஷாப்ரகிருதி தத்துவம் என்பார்கள். அறிவு பூர்வமாக விை-தயாக இருந்தபோது அதில் ஏதுகுறையும் இல்லாமல் இருந்ததால் அதை உத்தம புருஷன் என்றும் புருஷோத்தமன் என்றும் கூறுவார்கள். ஆக அதை வெவ்வேறு விதமாக உருவகப்படுத்துவதும் உண்டு. ஆனால் நாம் விஞ்ஞான மூலமாகப் பார்க்கும் போது அந்த ஆதி நிலைக்கு நாம் தருகிற குணங்கள் இரண்டு. அந்த ஆதிநிலை விை-தயாக இருக்கும்போது அதன் தன்மை என்ன என்பதை இன்னொரு உதாரணம் மூலமாகப் பார்ப்போம். ஒரு நெல் விதையை நாம் எடுத்துக் கொள்வோம். இந்த நெல் ஒரு ஆறுமாத காலப் பயிர் என்று வைத்து க்கொள்வோம். அப்படியென்றால் அந்த நெல் தரையில் விழுந்தவுடன் ஆறுமாத காலத்தில் பலனைக் கொடுத்துவிடும்.ஆறுமாத காலம் என்கிற அந்த time , interval அதன் வாழ்க்கையின் காலம். நெல் விதையாக வீட்டில் இருக்கும்போது அந்த ஆறுமாத காலத்தை நாம் கணக்கிடுவது கிடையாது. நெல் விதையாக இருக்கும்போது அதனுடைய காலம் ஓடுவதில்லை. நெல்விதை பரிணாமத்தை ஆரம்பிக்கும்போதுதான் காலம் பிறக்கிறது. அதைப் போலவே இந்தப் பிரபஞ்ச த்துக்கே விதையாக இருந்த அந்தச் சுத்தவெளி விை-தயாக இருந்தபோது அங்கு காலம் கிடையாது. அந்தச் சுத்தவெளி என்கிற விதை தனது பரிணாமத்தை ஆரம்பிக்கும் போதுதான் காலம் பிறக்கிறது. ஆகவே காலம் என்றுமே நிரந்தரமானது அல்ல. ஒரு காலகட்டத்தில் இந்தக் காலம் பிறந்திருக்கிறது.காலம் பிறப்பதற்கு முன் இருந்த நிலை சுத்தவெளி என்ற விதையான அந்த நிலைஆதி நிலைஆக அந்த ஆதி நிலையான அந்த விதை காலத்திற்கும் அப்பாற் பட்டது. காலத்திற்கும் அப்பாற்பட்டது என்ற சொற்றொடரின் பொருள்தான் சமஸ்கிருதத்தில் பிரம்மம் என்று கூறப்படுகிறது. ஆகவே அறிவும் ஆற்றலும் உள்ள அந்த ஆதி நிலையை நமது இந்து மதத்திற் பிரம்மம் என்றார்கள்.

இந்த ஆதி நிலையைச் சிந்தித்த மற்ற முனிவர்களும் உண்டு. இந்தியாவிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள இஸ்ரேலியப் பாலைவனத்தில் ஒரு


காலகட்டத்தில் ஒரு மகான் பிறக்கிறார். யேசுபிரான் என்ற அந்த மகான் இதே ஆதி நிலையைப்பற்றிச் சிந்திக்கிறார். சிந்திக்கும் போது நாம் வாழ்கின்ற இந்தப் பிரபஞ்சம் அனைத்திற்குமே மூலமாக ஒன்று இருந்திருக்கவேண்டும், அந்த மூலத்திலிருந்துதான் நாம் அனைவரும் வந்திருக்கிறோம் என்ற முடி வுக்கு வருகிறார். அந்த முடிவு எல்லோருக்கும் பொதுவாக அமைவதால் அதை யேசுபிரான் father என்று குறிப்பிட்டார். அதிலிருந்து வந்த அனைவரையும் யேசுபிரான் sons என்று குறிப்பிட்டார்கள். ஆகவே அந்த ஆதி நிலையை Almighty Father என்றும் அதிலிருந்து வந்த நம் அனைவரையும் Sons என்று கிறிஸ்துவ மதம் குறிப்பிடுகிறது. எந்த ஒன்றை இந்துமதம் பிரம்மம் என்று குறிப்பிடுகிறதோ அதையேதான் கிறிஸ்துவ மதம் Almighty Father என்று கூறுகிறது. வேறொரு காலகட்டத்தில் மற்றுமொரு இடத்தில் அராபியப் பாலைவனத்தில் வந்த மகான் முகமது நபிகள் இந்த ஆதி நிலையைப்பற்றிச் சிந்தித்து இருக்கிறார்கள்.அவருடைய சிந்தனையில், இந்தப் பிரபஞ்சத்திற்கென்று ஒரு மூலம் இருக்க வேண்டும், அந்த மூலம் எப்படிப்பட்டது என்பதை அவர் விளக்கும்போது அந்த மூலம் விதையாக இருந்த போது அந்த விதையைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது என்பதால் அந்த விதை இதுமாதிரி அல்லது அதுமாதிரி என்று ஈடு இணை சொல்லமுடியாது என்பார். ஆகவே ஆதி நிலை என்பது ஈடு இணையற்ற நிலை என்ற முடிவுக்கு வருகிறார் நபி அவர்கள். ஈடு இணை அற்றது என்பதற்கு அராபிய மொழியில் அல்லா என்ற பெயர். ஈடு இணையற்ற நிலையை முகமது நபி அவர்கள் அல்லா என்றார்.ஆக எல்லா மதங்களும் கூறுகின்ற பொருள் ஒன்றுதான்,அதுதான் அந்த ஆதி நிலை.அந்த ஒரே ஆதி நிலையைத்தான் இந்து மதம் பிரம்மம் என்றும் கிறிஸ்துவ மதம் பிதா என்றும் இஸ்லாம் மதம் அல்லா என்றும் கூறுகின்றன. ஆகவே பெயர்களைத்தான் நாம் வெவ்வேறாக வைத்திருக்கிறோமே தவிரப் பொருள் ஒன்றுதான்.இந்த ஒரே பொருளைத்தான் நாமக்கல் கவிஞர் பாடலில் நாம் பார்த்தோம். யார் இதற்கெல்லாம் அதிகாரி! அதைநாம் எண்ணிட வேண்டாமா! என்று கூறிய கவிஞர் பின்னாற் தொடருவார், அல்லா என்பார் சில பேர்கள் ஹரன் ஹரி என்பார் சிலபேர்கள் வல்லான் அவன் பரமண்டலத்தில் வாழும் பிதா என்பார் சிலபேர்கள் எல்லாம் இப்படிப் பலர்பேசும் ஏதோஒருபொருள் இருக்கின்றதே அந்த ஒரு பொருள்தான் அந்த ஆதிநிலை, சுத்தவெளி, Static space என்று சுட்டிக் காட்டுவதுதான் பிரம்மஞானம். ஆக அந்தப் பிரமஞானத்தை நாம் அறிகிற போது இது விஞ்ஞான பூர்வமாக அந்த இறை நிலையை நாம் அடையும்போது தெரிந்துகொள்ள வேண்டியது மதங்கள் பலவாறாகப் பல பெயர்களாற் கூறினா லும் இந்தப் பிரபஞ்சத்துக்கு மூலமாகத் திகழ்வது ஒரே மூலந்தான். அதுதான் சுத்தவெளி என்று அறியவேண்டும். பிரம்ம ஞானத்தைக் கற்கின்ற நாம், அதில் நம்பிக்கையுள்ள நாம் செய்யவேண்டியது நமது குழந்தைகளை வாரத்தில் இருமுறை கோவிலுக்கு அழைத்துச் செல்லலாம், சர்ச்சுக்கு அழைத்துச் செல்லலாம் அல்லது மசூதிக்கு அழைத்துச் செல்லலாம். எங்கு வேண் டுமானாலும் போய் இறைவனை நாம் வணங்க லாம். இடங்கள்தான் வித்தியாசமே தவிர நாம் வணங்கும் பொருள் ஒன்றுதான். இதையேதான் அன்று பாரதியார் கூறினார்,

**தெய்வம் பலபல சொல்லி பகைத் தீயை**
**வளர்ப்பர் மூடர்**
**உய்வது அனைத்திலும் ஒன்றாய் எங்கும்**
**ஓர்பொருள் ஆனது தெய்வம்**
**(உய்வது - வாழ்வது)**

தெய்வம் என்பது ஒரே பொருள்தான் என்பதை வலியுறுத்துவதுதான் பிரம்மஞானம்.ஆக இந்த பிரமஞானத்தை நாம் விஞ்ஞான பூர்வமாகப் பார்க் கும்போது ஆதி நிலை ஒன்றுதான், அதிலிருந்து தான்அனைத்தும் தோன்றியிருக்கின்றன என்ற ஓர் ஒருமித்த கருத்துக்கு (Intergrated view) நாம் வருகிறோம்.

ஆக இந்துமதம் என்று நாம் கூறும்பொழுது அந்த இந்துமதம் மற்றைய மதங்களையும் தன்னகத்தே வைத்திருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறோம். ஏனென்றால் எதை ஒரு பத்தாயிரம், பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு

இந்துமதம் பிரம்மம் என்று கூறியதோ அதையேதான் பின்னால் வந்த மகான்களும் பிதா என்றும் அல்லா என்றும் கூறியிருக்கிறார்கள்.பின்னால் வருகிற அத்தனை மதங்களையும் இந்துமதம் தன்னகத்தே வைத்துக்கொள்வதாற்றான் இந்துமதத்திற்கு சகிப்புத் தன்மையும் உண்டு. எந்த மதத்தையும் அது வெறுப்பதில்லை. நாம் சொல்வதைத்தான் அவை களும் சொல்கின்றன என்கிற சகிப்புத் தன்மை குறிப்பாக இந்து மதத்துக்கு உண்டு. Parts are many but the truth is one என்று சொல்வார்கள். அந்த உன்னத நிலைக்குப் பிரமஞானம் நம்மை இழுத்துச் செல்லும். (தொடரும்)



## பரம்பொருளே

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின்மீது தனியரசாணை,
பொழுதெல்லாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறி குணமேதும் இல்லதாய்
அனைத்தாய்க்
குலவிடும் தனிப்பரம்பொருளே!


*-மகாகவி சுப்ரமண்ய பாரதியார்-*
*படித்துச் சுவைத்தவர்:*
*திருமதி ஜெயசீலன்*




## Radha Sarees

Exclusive & Elegant
Wedding Sarees, Wedding Langhas
Banaras Silk sarees
Choli Suits, Japanese Sarees,
Salvar , Khamiz, Jewellery
திருமணத்திற்கான பட்டுப்புடவைகள்
பனாரஸ் புடவைகள், சல்வார்
கமிசுகள் மற்றும் தங்க நகைகள்
யாவும் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**279 Green Street**
**Forest Gate**
**London E7 8LJ**
**Tel : 0181 472 8245**
**Fax: 0181 472 2369**





# Satyan

## *Jewellers*

**வாடிக்கையாளர்களுக்கு எமது
மனங்கனிந்த தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்**

## Specialist in 22ct. Gold Jewellery & Diamond

தரமான நகை தேடி வாருங்கள்
நகையோடு நகை தருவோம் வாருங்கள்
கரமெல்லாம் காப்பதனை அணியுங்கள்
கண்ணாளன் மனங்குளிர வாழுங்கள்
விரலெல்லாம் மோதிரத்தைப் போட்டிடலாம்
விச்சாக நிர் நடந்து வாருங்கள்
பாரதினில் சசிந்த நகைமாளிகை
சத்தியனின் இடம் வந்து சேருங்கள்

**220 GREEN STREET
FOREST GATE
LONDON E7 8LF
TEL: 0181 471 0564
TEL: 0181 470 7056
TEL: 0181 503 5379**

# சைவ முன்னேற்றச் சங்கம் (செய்தி மடல்)

## சைவ முன்னேற்றச் சங்கத்தின் 20ஆம் ஆண்டுக் கான நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டது

சங்கத்தினுடைய வருடாந்த பொதுக்கூட்டம் தமிழ் இல்லத்தில் நடைபெற்றது. இங்கு கூடியிருந்த சங்க பொது அங்கத்தவர்களினால் பின்வருவோர் 20 ஆம் ஆண்டுக்கான ஊழியர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

President & Trustee: Mr. R. Pathmanathan , Vice President : Mr W. Nagaratnam
General Secretary & Trustee: Mr S. Anandathiyagar, Treasurer & Trustee: Mr. T. kanagasabai
Trustees (1) Mr. V.R. Ramanathan, (2) Mr. C. Sithamparapillai (3) Mr. V. Sellathurai
(4). Mrs. T. Muthukumarasamy. Religious Secretary: Mr K. Sivagurunathapillai
School Secretary: Mrs P. Uthamakunan Social Service Secretary: Mr V.C. vamananthan
Publication Secretary: Mr S. Asokan Property Development Secretary: MR.S. Kanagenthiran
Membership Secretary: Mr R. Muruganthan Assistant Treasurer(1) Mr. N. Sivarasan
Assistant Tresurer(2) Mr S. Sabesan Commitee Members: (1)Mr M. Gunaratnam, (2) Mr. V.R. Loganathan (3) Mr. R. Murugathasan (4) Mrs R. Nadarajah (5) Mr. M. Natkunathayalan
(6) Dr N. Navaneetharajah (7) Mr. G. Parameswaran (8) Mrs G. Yogarajah.

## ஈசன் பணியில் 20 ஆண்டுகள்

– கௌரவ பொதுச் செயலாளர்

சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது கௌரவ பொதுச் செயலாளர் அவர்கள் சங்கத்தின் பணிகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். அவரது உரையில் சங்கமானது சமய உணர்வினையும் நெறியையும் தொடர்ந்து கடைப்பிடிக்க பிள்ளைகளுக்கு சைவ சமய வழிமுறைகளை முறைப்படி புகட்டுதல் அவசியம் என்று கூறினார். இதன்பொருட்டு சங்கம் தனது வழமையான பணிகளோடு சைவ சமயக் கல்வித் திட்டத்தை இருபதாம் ஆண்டுக்கான முக்கிய திட்டமாகக் கொண்டுள்ளதெனத் தெரிவித்தார்.

## காரைக்காலம்மையார் குருபூசை

காரைக்காலம்மையார் குருபூசை ஹரோவிலுள்ள திரு திருமதி ஸ்ரீரங்கன் அவர்களது இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது. இவ் வழிபாட்டின்போது திரு கு. ரங்கநாதன் அவர்கள் காரைக்காலம்மையாரின் சிவபக்தி என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## கலையின்பம் 97

வாத்திய இசை □ மதுரகானங்கள்
□ நாட்டிய நாடகம்
□ மெல்லிசைப் பாடல்கள்
□ வீணையிசை □ நடனம்
17- 05 1997 சனிக்கிழமை
**At**
**Walthamstow Assembly Hall**
**Tickets: Adults £5.00**
**Children(under 14) £2.00**
Contact:
01279 757074 01268 766624
0181 550 2739 0181 550 3654

## தேவை

நால்வர் தமிழக் கலை நிலையத்தில் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆசிரிய ஆசிரியைகள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தலைமை ஆசிரியர்:
ச. ஆனந்ததியாகர்
**தொலைபேசி: 0181 924 8492**


தென் இந்திய இசைக் கருவிகள்
தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நேரில்
வாருங்கள் அல்லது தபாலில்
தொடர்பு கொள்ளுங்கள்
7 DAYS A WEEK, 11.00AM TO 7.00PM
JAS Musicials Ltd
108A The Broadway, Southall Middx, UB1 1QF UK.
Tel: 0181 574 2686 FAX: 0181 571 7445


# GLEN CARRIERS LIMITED

**14 Allied Way, Off Warple Way, Acton London W3 0RQ**
**Tel : 0181 740 8379 / 0181 749 0595**
**Fax: 0181 740 4229 Telex: 929657 Glenca G**

* SHIPPING
* AIRFREIGHT
* TRAVEL

UNACCOMPANIED BAGGAGE
PERSONAL EFFECTS
HOUSEHOLD GOODS
VEHICLES
MACHINERY ETC.

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**



ATOL
74395

Main Agents for Air Lanka

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும்
உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த
சேவையினைப் பெறுவதற்கும்
சிறந்த ஸ்தாபனம்

வாடிக்கையாளர்களுக்கு
எம் மனம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துகள்

**ALL YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO**

நியாய விலைக்கு இலண்டனில்
ஒரே தங்கமாளிகை

# Raju Pattni & Son

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஒரே தங்க மாளிகை

**We specialise in 22CT. Gold & Diamond Jewellery**
**Tax Free For Overseas Visitors**

**தமிழ் மக்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்ற, நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.**



அழகான வண்ண வண்ண உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான தாலிக்கொடிகள், நெக்கிலஸ்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணங்களில் அமைந்த அட்டியல் வகைகள், பதக்கம் சங்கிலிகள், அழகான டிசைன்களில் கண்களைப் பறிக்கும் தங்க வளையல்கள், சங்கிலிகள் இவை மாத்திரமா? பென்ரன்கள், தோடுகள், இரத்தினக்கற்கள் பதித்த மோதிரங்கள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரேயொரு நகை மாளிகை

**ராஜு பட்னி அன் சன்**

பொன்னுருக்குவதற்கு ஏற்ற வசதிகளுமுண்டு

# ராஜு பட்னி அன் சன்

58 - 60 Ealing Road, Wembley, Middx HA0 4TQ
Tel: 0181 903 6677, 0181 902 0577, Fax: 0181 903 4887

£2000 க்கு மேல் நகை வாங்கும் உங்களுக்கு £100 நன்கொடைச் சீட்டை இலவசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள் ராஜு பட்னி அன் சன் நகை மாளிகையினர்

**இன்றே குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்.**


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885) இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14. 4. 97 அன்று வெளியிடப்பட்டது.